இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 62 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 24 – புதன்கிழமை 11 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 62: Thiruvalluvar Year - 2054 - Purattasi 24 - Wednesday 11 October 2023 - Madurai 12 Pages ₹5.00

## தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக

# சிறுவணிகர் ‘வரி நிலுவை சமாதானத் திட்டம்’!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 110 விதியின்கீழ் அறிவித்து திட்டம் குறித்து விளக்கம்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.10.2023) சட்டமன்றப் பேரவையில், புதிய வணிக வரி சமாதானத் திட்டம் குறித்து சட்டப்பேரவை விதி 110ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

**சென்னை, அக். 11-**

**தமிழ்நாட்டில் 95,502 சிறு வணிகர்களின் நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவது உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கக்கூடிய, ‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தை’ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.**

**இதுதவிர, வணிகர்களுக்கு மேலும் பல சலுகை அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்.**

சட்டமன்றப் பேரவையில், வணிக வரி சமாதானத் திட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விதி 110ன்கீழ் அளித்த அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும், சிறு வணிகர்களின் நலன் காத்திடுவதற்கான மேலும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும், இந்த அரசு செயல்படுத்த உள்ள ‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’ பற்றிய அறிவிப்பை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகின்றேன்.

தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் சம்பந்தப்பட்ட வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிகவரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

### வணிகர்கள் கோரிக்கை!

இவற்றில் பெரும்பான்மையான வழக்குகள் தமிழ்நாடு வணிக வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள். மேற்கூறிய இரு முக்கிய சட்டங்கள் மற்றும் பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 1.7.2017 முதல் நாடு முழுமைக்கும் ஜி.எஸ்.டி (GST) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இருந்தாலும், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச்சட்டங்களின் கீழ் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த நிலுவைத் தொகையை திருப்பி செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் நீண்ட நாட்களாக முன்வைத்து வருகிறார்கள். இந்தக்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

**தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.**

## சிறைவாசிகள் விடுதலை: ஆட்சியில் இருந்த போது துளியும் நடவடிக்கை எடுக்காத அ.தி.மு.க.வுக்கு இப்போது

# இஸ்லாமியர் மீது என்ன திடீர் பாசம்?

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமான கேள்வி!

**சென்னை, அக். 11 -**

**“இஸ்லாமிய சிறைவாசிகள் விடுதலை குறித்து ஆட்சியில் இருந்த போது நடவடிக்கை எடுக்காத அ.தி.மு.க.வுக்கு இப்போது இஸ்லாமியர் மீது என்ன திடீர் பாசம்?” என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமாக கேள்வி எழுப்பினார்.**

சட்டமன்றப் பேரவையில், இசுலாமிய சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பான சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு :-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் சிறைவாசிகளாக சிறையிலே அடைபட்டிருக்கக்கூடிய கைதிகளை விரைவில் விடுதலை செய்திட வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தோடு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர்கள் எம்.எச். ஜவாகிருல்லா, கு. செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், சின்னத்துரை, ராமச்சந்திரன், ஜி.கே. மணி, ஜெகன் மூர்த்தி, பூமிநாதன் ஆகிய 9 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துகளுக்கு எந்த வித மாறுபாடுகளை, வேறுபாடுகளை நாங்கள் எடுத்துச் சொல்ல தயாராக இல்லை. அவை அனைத்தையும் நாங்கள் முழுமனதோடு, இந்த அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்; (மேசையைத் தட்டும் ஒலி) காத்திருக்கிறோம்.

### நீதியரசர் தலைமையில் 6 பேர் அடங்கிய குழு!

ஆயுள் சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக உரிய விளக்கங்களை இந்த மாமன்றத்துக்கு நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டுச் சிறைவாசிகளில் பத்து ஆண்டுகள் மற்றும் இருபது ஆண்டுகள் தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு ஆராய வேண்டுமென்பதற்காகத்தான், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு 22.12.2021ல் இந்த அரசால் அமைக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் இதுதொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில், இவர்களின் வழக்குகளை ஆராய்ந்தும், அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாகவும் இக்குழு அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு தன்னுடைய அறிக்கையினை 28.10.2022 அன்று அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கையில் 264 ஆயுள்தண்டனை சிறைவாசிகள் மட்டுமே குழுவால் முன்விடுதலைக்கு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, “ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# இஸ்ரேல் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்!

## 1,600 பேர் பலி!

*ஜெருசலேம், அக். 11 -*

*போர் வலுத்து வரும் வேளையில் இஸ்ரேலில் கூடுதல் ராணுவ வீரர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் பேர் வரை சேர்க்கப்படலாம் என தெரிகிறது.*

*இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது தொடர்பாக ஹமாஸ் அமைப்பினர் வீடியோ வெளியிட்டுள்ளனர்.*

*எல்லையோர கண்காணிப்பு கோபுரங்கள் மீது ராக்கெட் வீசி ஹமாஸ் அமைப்பினர் தாக்கிய வீடியோ வெளியாகியுள்ளது*

*ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த காசா பகுதியை சுற்றி வளைத்து இஸ்ரேல் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது*

*பயங்கரவாத அமைப்புகளான ஐஎஸ்ஐஎஸ், அல் கொய்தா போன்றது ஹமாஸ் அமைப்பு. இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். என ஐ.நா.,வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் தெரிவித்துள்ளார்.*

*இஸ்ரேல் ஹமாஸ் போர் எதிரொலியாக சர்வதேச சந்தையில், கச்சா எண்ணெய் விலை 5 சதவீதம் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் 84.58 டாலராக இருந்த கச்சா எண்ணெய் விலை நேற்று 89 டாலராக உயர்ந்துள்ளது.*

*இஸ்ரேல் பாலஸ்தீன் நாடுகளுக்கு இடையிலான போர் எதிரொலியால் சென்செக்ஸ் கடும் வீழ்ச்சியடைந்தது.*

*இதன்மூலம் முதலீட்டாளர்களுக்கு 4 லட்சம் கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹமாஸ் தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை 1600ஐ தாண்டியது, 2,500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.*

## கேரளாவில் நிபா வைரஸை தொடர்ந்து ‘புரூசெல்லோசிஸ்’ புதிய வைரஸ்! – மருத்துவர்கள் எச்சரிக்கை!

திருவனந்தபுரம், அக். 11 – கேரளாவில் நிபா வைரஸை தொடர்ந்து புரூசெல்லோசிஸ் என்ற புதிய வைரஸ் பரவி வருவது அம்மாநில மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கேரளாவில் மீண்டும் நிபா வைரஸ் பரவ தொடங்கியது. மொத்தமாக 6 பேருக்கு நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், இதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் இந்த வைரஸ் வேகமாக பரவிய நிலையில், அங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், கேரள மாநிலத்தில் புரூசெல்லோசிஸ் என்ற புதிய வைரஸ் பரவி வருவது அம்மாநில மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நிபா வைரஸை தொடர்ந்து புரூசெல்லோசிஸ் நோயால் பாதிக்கப்பட்ட தந்தை, மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய புரூசெல்லோசிஸ் நோய் மரணத்தை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11-10-2023

# காஷ்மீரும் வழிமொழிகிறது!

பா.ஜ.க. ஆட்சிக்கு அகில இந்திய அளவில் முற்றுப்புள்ளி வைப்பதற்கான அறிகுறி அனைத்து மாநிலங்களில் இருந்தும் வரத் தொடங்கி இருக்கிறது. இதோ காஷ்மீரும் வழிமொழியத் தொடங்கி இருக்கிறது.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த பல்வேறு இடைத் தேர்தல்களில் 'இந்தியா' கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்றன. 6 மாநிலங்களில் உள்ள 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அது. உத்தரப்பிரதேச மாநிலம் கோசி தொகுதியை சமாஜ்வாதி கட்சியும், கேரள மாநிலத்தில் உள்ள புதுப்பள்ளி தொகுதியை காங்கிரஸ் கட்சியும், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள துப்குரி தொகுதியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சியும், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தும்ரி தொகுதியை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும் கைப்பற்றியது. காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமூல் காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகியவை 'இந்தியா' கூட்டணியில் இடம் பெற்றுள்ள முக்கிய கட்சிகள் ஆகும்.

**கடந்த மே மாதம் நடந்த கர்நாடக மாநிலத் தேர்தலில் பா.ஜ.க. தோற்றது. கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பல்வேறு மாநில சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் தோல்வி, கேரளாவில் தோல்வி, பீகாரில் தோல்வி, மேற்கு வங்கத்தில் தோல்வி, ஜார்கண்ட் மாநிலத்தில் தோல்வி, ஒடிசாவில் தோல்வி, சட்டீஸ்கரிலும் தோல்வி, தெலுங்கானாவில் தோல்வி, ஆந்திராவில் தோல்வி, பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு முறை தோல்வி, டெல்லியில் இரண்டு முறை தோல்வி, ராஜஸ்தானில் தோல்வி - என சட்டமன்றத் தேர்தல்களில் தோற்ற கட்சிதான் பா.ஜ.க. இப்படி தோற்றுக் கொண்டே வரும் கட்சியான பா.ஜ.க. கடந்த வாரம் காஷ்மீரிலும் தோற்றுள்ளது.**

லடாக் கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு நடைபெற்ற தேர்தலில், 'இந்தியா' கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. 1 இடத்தை மட்டும் வெற்றி பெற்று பா.ஜ.க. படுதோல்வியடைந்துள்ளது.

**லடாக் கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு கடந்த 4ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. அதன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 30 இடங்களில் 26 இடங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில், காங்கிரஸ் 10, தேசிய மாநாட்டு கட்சி 12 இடங்களிலும் வெற்றி வாகை சூடியுள்ளன. அதாவது, 'இந்தியா' கூட்டணியானது 22 இடங்களைக் கைப்பற்றி உள்ளது.**

17 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒரே ஒரு இடத்தை மட்டுமே பெற்று 16 இடங்களில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. ஜம்மு-காஷ்மீரில் சட்டமன்றத் தேர்தலை நடத்த தாமதம் செய்து வருவதாக இந்தியா கூட்டணி புகார் தெரிவித்து வரும் நிலையில், இந்த லடாக் தன்னாட்சி மலைமேம்பாட்டு கவுன்சில் தேர்தல் முடிவுகள் முக்கியமாக கருதப்படுகிறது. இந்த வெற்றியை காஷ்மீர் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370, கடந்த 2019ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி நாடாளுமன்றத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது. இரண்டு யூனியன் பிரதேசங்களாக அதனை பிரித்தார்கள். இவை துணை நிலை ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஜம்மு-காஷ்மீர் தேர்தலை இதுவரை நடத்தவில்லை. 370 ஆவது பிரிவு நீக்கத்தை ஒட்டுமொத்த இந்தியாவும் குறிப்பாக காஷ்மீர் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு விட்டதாக பா.ஜ.க. ஒரு பிம்பத்தை கட்டமைத்தது. உண்மையாக இருந்தால் அந்த மாநிலத்தில் தைரியமாக தேர்தலை நடத்த வேண்டும். அதைச் செய்ய தைரியம் இல்லை.

**ஜம்மு காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி அளித்த பிறகு நடைபெறும் தேர்தல் இது. இதில் காங்கிரசும் தேசிய மாநாட்டுக் கட்சியும் இணைந்து வெற்றியைப் பெற்றுள்ளது. 'லடாக் மற்றும் கார்கிலில் புதிய ஜனநாயக விடியல் ஏற்பட்டுள்ளது' என்று ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார்.**

370 ஆவது பிரிவை நீக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கையை எதிர்த்து பல்வேறு தரப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

**இந்த வழக்குகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது. அப்போது மனு தாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், "இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றம் 5 ஆண்டுகளை எடுத்துக் கொண்டதால் இது ஒரு வரலாற்றுத் தருணம். இந்த 5 ஆண்டுகளில் ஜம்மு-காஷ்மீரில் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி கிடையாது. அம்மாநிலத்தில் சட்டப்பிரிவு 356ஐ பயன்படுத்துவதற்கு முன் அம்மாநில சட்டமன்றம் முடக்கப்பட்டது. இதற்கான அதிகாரம் ஆளுநருக்கு உள்ளதா என்பதை உச்சநீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை எதிர்க்கும் அதேவேளையில், ஜம்மு-காஷ்மீர் இந்தியா வின் ஒருங்கிணைந்த பகுதி என்பதில் மனுதாரர் உறுதியாக இருக்கிறார். அது நேற்றும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது; இன்றும் அது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது; நாளையும் அது அவ்வாறே இருக்கும் என்பதே மனு தாரரின் நிலைப்பாடு" என்று வாதிட்டார். விசாரணை நடைபெற்று வருகிறது.**

இப்படி 370ஆவது பிரிவு நீக்கப்பட்ட பிறகு காஷ்மீர் அமைதியாக இருக்கிறதா என்றால் இல்லை என்பதே உண்மை. அப்படியானால் எதற்காக 370 ஆவது பிரிவை நீக்கினார்கள்? தங்களது மதவாத எண்ணத்தை திருப்திப்படுத்து வதற்காக!

**அரசியல் தலைவர்கள் அனைவரையும் வீட்டுக் காவலில் வைத்து விட்டு இதனைச் செய்தார்கள். அரசியல் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்ததைப் போல மக்களை வைக்க முடியாது அல்லவா? மக்கள் வெளியில் வந்து வாக்களித்து விட்டார்கள். பா.ஜ.க.வுக்கு படுதோல்வியை தந்துவிட்டார்கள். இதோ பா.ஜ.க.வை தோல்வியுறச் செய்யும் முடிவில் காஷ்மீரும் சேர்ந்துவிட்டது. 'இந்தியா' கூட்டணியை காஷ்மீரும் வழிமொழிந்துவிட்டது.**





தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட அம்பேத்கர் நகர் பகுதியில் ரூ. 28.27 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப பொறியியல் மற்றும் கணித பூங்கா மற்றும் நகர்சார் மையத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி பிரம்மசக்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் செந்தில் ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே போர் நடைபெற்று வரும் நிலையில்

# இஸ்ரேலில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

**சென்னை, அக். 11 -**

**இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

இஸ்ரேல், பாலஸ்தீனத்திற்கு இடையே தற்போது போர் நடைபெற்று வரும் நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்தோருக்கு பின்வரும் நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அயலகத் தமிழர் நலத்துறையால் உடனடியாக உதவி எண்கள் வெளியிடப்பட்டு, அங்கு பாதிக்கப்பட்டுள்ளோர் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர் தமிழ்நாடு அரசை உதவி எண்கள் 8760248625, 9940256444, 9600023645 மூலமாகவும், மின்னஞ்சல் nrtchennai@tn.gov.in, nrtchennai@gmail.com மூலமாகவும் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் அங்குள்ள தமிழர்களிடம் தற்போது தொடர்பு கொண்டு, சுமார் எண்பத்து நான்கு (84) நபர்களின் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் அங்கு மேற்படிப்புக்காகவும், திட்டப் பணிகளுக்காகவும் சென்றவர்கள். இதில் சில சுற்றுலா பயணிகளும் அடங்குவர். இவர்கள் பெர்சிபா (Beersheba), எருகாம் (Yeruham), பென் குரியான் (Ben Gurion), கிழக்கு ஜெருசேலம் (East Jerusalem), ஜெருசேலம் பல்கலைக்கழகம் (University of Jerusalem) மற்றும் டெல் அவிவ் பல்கலைக்கழகம் (Tel Aviv University) போன்ற இடங்களில் தங்கி உள்ளனர்.

இத்தகவல்கள் உடனடியாக ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு, அவர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அங்குள்ள தமிழர்கள் தாங்கள் தற்போது நலமாக இருப்பதாகவும், தங்குமிடம் மற்றும் உணவுத் தேவைகளுக்கான சிரமங்கள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளதோடு, தங்களுடன் தொடர்பில் இருக்கும் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்து காணொளி மூலமாக தகவல் அனுப்பியுள்ளனர்.

மேலும், அயலகத் தமிழர் நலத் துறை மூலம் இஸ்ரேலில் உள்ள தமிழர்களின் இங்குள்ள குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு, நிலைமை குறித்து தொடர் தகவல்கள் தெரிவிக்கப் பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு அங்குள்ள தமிழர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதுடன், அங்குள்ள சூழ்நிலை மற்றும் ஒன்றிய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### புதிய கல்விக் கொள்கையை எதிர்த்து டெல்லியில் நடைபெறும் பேரணியில் பங்கேற்பு!

# மாணவர் அணியினர் கருத்தியல் தெளிவு பெற 4 இடங்களில் பயிலரங்கம்!

## கழக மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, அக். 11 -*

*தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (09.10.2023 திங்கட்கிழமை) மாலை, சென்னை, "அண்ணா அறிவாலயத்தில்" உள்ள கழக அலுவலகத்தில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இக்கலந்தாலோசனை கூட்டத்தில், அணியின் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா சின்னமுத்து, ஜெ. வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு: -*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மாணவர் அணி சார்பில் மாவட்டந்தோறும் பள்ளி மற்றும் கல்லூரி அளவில் "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்" எனும் தலைப்பில் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதென 9.9.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, பள்ளி அளவில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் பங்கேற்கக்கூடிய அளவிலும், அனைத்து வகை கல்லூரி மாணவர்களும் பங்கேற்கலாம் என முடிவெடுக்கப் பட்டு, மாவட்ட அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு முதல் மூன்று இடங்களை பிடிப்பவர்களுக்கு பரிசுத் தொகையினை மாவட்ட மாணவர் அணி வழங்குவதென்றும், மாவட்ட அளவில் முதல் இடம் பெறுபவர்கள் மட்டும் மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி உடையவர்களாக கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டு மாநில அளவிலான போட்டிகளை நவம்பர் முதல் வாரத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.*

*09.09.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தவாறு, மாணவர் அணியில் பணியாற்றக்கூடிய மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் இயக்கத்தை முழுவதுமாக அறிந்தவர்களாகவும், கருத்தியலில் தெளிவு பெற்றவர்களாகவும், அடுத்த தலைமுறையினருக்கு திராவிட இயக்க கொள்கை, லட்சியம், கருத்துக்கள், இயக்க வரலாற்றையும், இயக்க தலைவர்களைப் பற்றிய புரிதலையும், கழக ஆட்சியில் இயற்றப்பட்ட திட்டங்கள், மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையிலும், வருகிற காலங்களில் கொள்கை, லட்சியம், கருத்தியலில் வலிமைமிக்கவர்களாக அரசியலில் களமாடக் கூடியவர்களாக மாணவர் அணியினர் விளங்க வேண்டுமென்ற கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக மாணவர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு "பயிலரங்கம்" நடத்துவதென தீர்மானிக்கப் பட்டு, நான்கு இடங்களில் நடத்துவதென்றும் முதல் கட்டமான அக்டோபர் 27 முதல் 29 வரை மூன்று நாட்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் முதல் பயிலரங்கம் பின் வரும் மாவட்டங்களுக்கு (சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு) நடைபெற உள்ளது. பிற மாவட்டங்களுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மாணவர் அணியில் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் நடத்திட கடந்த 09.09.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, நேர்காணலை விரைந்து நடத்தி, பட்டியலை அணிச் செயலாளரிடம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய "தமிழ்நாடு மாணவர் மன்றம்"த்தை அவரது நூற்றாண்டில், மீண்டும் உருவாக்கிடும் பொன்னான வாய்ப்பினை நமது கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ளார். அதன்படி "தமிழ்நாடு மாணவர் மன்றம்"தின் இலட்சினை பற்றி இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப் பட்டது. மாதிரி இலட்சினைகள் தயாரிக்கப்பட்டு கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பவும், ஒப்புதல் பெறப்பட்டப் பின்னர் உறுப்பினர் சேர்க்கைக்கான படிவங்களை வழங்கி, கல்லூரிகளில் அமைப்பினை ஏற்படுத்துவது சம்பந்தமாக முடிவெடுக்கப்பட்டது.*

*மாணவர் விரோத தேசிய கல்விக் கொள்கையை திணிக்கின்ற பாசிச பா.ஜ.க. அரசின் கொள்கையை எதிர்க்கும் ஜனநாயக, முற்போக்கு, மதச்சார்பற்ற கொள்கைக் கொண்ட மாணவர் அமைப்புகள், இந்திய அளவில் ஓர் இயக்கத்தை ஏற்படுத்த முதற்கட்ட கலந்துரையாடல் கூட்டம் டெல்லியில் கடந்த (12.05.2023) நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், மாநில உரிமை, இடஒதுக்கீடு, பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை பறிப்பு, பள்ளிகள் தொடங்கி கல்லூரி மற்றும் பல்கலைக் கழகம் வரையிலான கல்விக் கொள்கையை மாற்றி வரலாற்று திரிபுகளை செய்யும் தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து, இந்திய அளவிலான மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் டெல்லியில் நடைபெறும் பேரணியில், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.*

# தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கை!

### ஆஸ்திரேலியா நாடாளுமன்றக்குழு பேரவை மாடத்திலிருந்து பார்வையிட்டது!

*சென்னை, அக் 11-*

*தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கையை பேரவை மாடத்திலிருந்து ஆஸ்திரேலியா நாடாளுமன்றக் குழுவினர் பார்வையிட்டனர்.*

*இது பற்றி அறிவித்த பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்கள் தம் சார்பிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பிலும் அவர்களை வரவேற்பதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டபோது மாடத்தில் இருந்த ஆஸ்திரேலியா நாடாளுமன்ற குழுவினர் எழுந்து நின்று வணங்கினர்.*

*இது குறித்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதாவது:-*

*ஆஸ்திரேலியா நாடாளுமன்றத் தலைவர் மில்டன் டிக் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தற்போது பேரவையிலுள்ள முக்கிய பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும், அவை உறுப்பினர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நான் அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.*



திருவெண்ணெய்நல்லூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், வருவாய் கோட்டாட்சியர் பிரவீணா குமாரி, தாசில்தார் இராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர்கள் பி.வி.ஆர்.விசுவநாதன், தே.முருகவேல், பேரூர்ச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல்ராஜ், ஜோதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு ...

முதல் பக்கத் தொடர்ச்சி

கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து, இத்தகைய பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் ஒரு சமாதானத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகைகள் குறித்து பல சமாதானத் திட்டங்கள்செயல்படுத்தப்பட்டு இருந்தாலும், புதியதோர் அணுகுமுறையோடும் கூடுதல் சலுகைகளோடும் இந்தத் திட்டம் இப்போது வடிவமைக்கப் பட்டுள்ளது.

**முழு விலக்கு அளிக்கப்படும்!**

இந்தத் திட்டத்தின் கீழ், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்நிலுவைத் தொகையானது முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர இதர வணிகர்கள் மற்றும் நிறுவனங்கள் அனைவரும்,

ரூபாய் ஐம்பதாயிரம் முதல் பத்து இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் பத்து இலட்சம் முதல் ஒரு கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் ஒரு கோடி முதல் பத்து கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள்,

ரூபாய் பத்து கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர்.

மேற்கூறிய நான்கு வரம்புகளில் முதல் வரம்பில் உள்ளவர்கள் மொத்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காட்டைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம். அல்லது நிலுவையில் உள்ள வணிகவரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுத் தொகையைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகப் பெருமக்களும், நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டிமற்றும்அபராதத்தொகையில் குறிப்பிட்ட விழுக்காட்டைக் கட்டினால்நிலுவைவழக்குகளில்இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல் முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**திரண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி!**

இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக, நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டி தொகையும் (Accrued Interest) முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம் வரும் 16.10.2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி வரை இந்த சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்கு சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

# பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமான கேள்வி...

முதல் பக்கத் தொடர்ச்சி

பரிசீலனை செய்யும் பொருட்டு” 11.8.2023 அன்று முதற்கட்டமாக தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 20 சிறைவாசிகள் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அனைத்து சிறைவாசிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்துக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத்தட்டும்ஒலி)

ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதி ஆதிநாதன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மீதமுள்ள ஆயுள் தண்டனை சிறைக் கைதிகள் விடுதலை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பாக அரசின் சார்பாக மேலும் சில கருத்துக்களை இந்த அவையில் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

**பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளையொட்டி முன் விடுதலை!**

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரது வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், நான் 13.9.2021ல் அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113வது பிறந்த நாளை முன்னிட்டு சிறையில் நீண்ட கால சிறைவாசம் அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையைக் குறைத்து நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் குறைத்து முன் விடுதலை செய்ய உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலை!**

அதேபோல், அறிவுரைக் கழக (Advisory Board) திட்டத்தின்கீழ் 14 ஆயுள் தண்டனை சிறைவாசிகளும், மருத்துவக் காரணங்கள் மற்றும் நீதிமன்ற ஆணைகளின் படி 15 ஆயுள்தண்டனை சிறைவாசிகளும்ஏற்கனவேமுன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில், 566 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டு, 8.10.2023 வரை 335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களில் 9 பேர் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். “இசுலாமிய கைதிகள் யாருமே விடுதலை செய்யப்படவில்லை; அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை” என்ற தோற்றத்தைச் சிலர் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். இந்த விஷயத்தில் சட்டரீதியான முறைப்படி தமிழ்நாடு அரசு உரிய வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த அவைக்கு நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ.தி.மு.க. ஆட்சியில் கண்மூடிக் கொண்டிருந்தது ஏன்?**

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துப் பேசினார். இன்றைக்கு இஸ்லாமிய சிறைவாசிகள் முன்விடுதலை பற்றி அ.தி.மு.க. பேசுவதால், நான் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தபோது இந்த விஷயத்தில் கண்ணை மூடிக் கொண்டு இருந்ததற்கு என்ன காரணம்? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் இப்போது அறிய விரும்புகிறேன்.

தர்மபுரியில் பேருந்தில் பயணித்த மாணவிகளை உயிரோடு பட்டப்பகலில் எரித்தவர்களை எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்விடுதலை செய்த உங்களுடைய ஆட்சியில், ஏன் இஸ்லாமிய சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணவத்தோடு அல்ல; அடக்கத்தோடு நான் கேட்க விரும்புகிற கேள்வி. ஆட்சியில் இருந்த போது இசுலாமிய சிறைவாசிகளின் விடுதலை பற்றி துளியும் நடவடிக்கை எடுக்காமல், அதுமட்டுமல்ல; குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு எல்லாவற்றையும் கண்மூடி ஆதரித்த அ.தி.மு.க., இப்போது இசுலாமிய சிறைவாசிகள் மீது காட்டக்கூடிய திடீர் பாசம் ஏன் என்று இங்கு இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். அதைவிட சிறுபான்மை சகோதர, சகோதரிகளுக்கு மிக நன்றாகவே தெரியும் என்பதை மாத்திரம் இங்கே பதிவு செய்து, இந்த விளக்கத்தோடு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**ஆளுநரின் ஒப்புதலுக்குப் பிறகு விடுதலை!**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, “ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு பரிசீலனை செய்யும் பொருட்டு” 11.8.2023 அன்று முதற்கட்டமாக தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 20 சிறைவாசிகள் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அனைத்து சிறைவாசிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்துக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

## கோவை – திருப்பூர் மண்டல

# ஆதி திராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர்கள் சு.முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் - மா.மதிவேந்தன் - கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

*கோவை, அக். 11 -*

வருகின்ற 13.10.2023 ஆம் தேதி காலை 10 மணி அளவில் கோவை மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் மண்டல ஆதிதிராவிடர் நலக் குழு நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது இந்த கூட்டத்தில் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் புதிய பொறுப்புகளில் நியமனம் செய்யப்பட்ட தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டுமாய் வேண்டுகிறேன். இந்த கூட்டத்திற்கு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுசாமி தலைமை வகிக்கிறார்.

கூட்டத்திற்கு கோவை மாநகர் மாவட்ட அமைப்பாளர் டெம்போ சிவா திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் கன்னிமுத்து மற்றும் திருப்பூர் மாநகர வடக்கு மாவட்ட அமைப்பாளர் குமார் மற்றும் திருப்பூர் மாநகர தெற்கு மாவட்ட அமைப்பாளர் துரைசாமி ஆகியோர் முன்னிலை பொறுப்பு வகிக்கின்றனர் அனைவரையும் வழக்கறிஞரும் கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் தென்னை சிவா வரவேற்று பேசுகிறார் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் மதிப்புக்குரிய அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்.

கூட்டத்தில் கோவை பொறுப்பு அமைச்சரும் வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் செய்தி மற்றும் காகிதத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதன் மற்றும் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

கயல்விழி செல்வராஜ் அனைவரும் கலந்து கொள்ள உள்ளனர் சிறப்புரை ஆற்ற திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மற்றும் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. நா.கார்த்திக் மற்றும் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல . பத்மநாபன் திருப்பூர் மாநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.கே.நாகராஜ் மற்றும் திருப்பூர் வடக்கு மாநகர மாவட்ட கழக செயலாளர் மேயர் தினேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் முடிவில் கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் கினவை ஞானசேகரன் நன்றியுரை ஆற்ற உள்ளார் கூட்ட ஏற்பாடுகளை கோவை மண்டல ஆதிதிராவிடர் நலக் குழு நிர்வாகிகள் கவனித்து கொள்ள உள்ளார்கள். புதியதாக நியமனம் செய்யப்பட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோது தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் , ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தேர்ந்தெடுப்பதற்கு தரப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட வாரியாக பரிசீலனை செய்து நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பது குறித்து , கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான தளபதியார் நம் சமுதாயத மக்களுக்கு செய்து கொண்டு வரும் அளப்பறியாத மகத்தான சாதனைகளை நம்முடைய நம்முடைய இன மக்களுக்கு நினைவூட்டும் விதமாக திண்ணைப் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்வது குறித்து , நம் அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் காலணிகளில் தெருமுனை பிரச்சாரம் செய்வது , நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

## சென்னையில் 14 ஆம் தேதி மகளிர் உரிமை மாநாடு!

# நாமக்கல் மேற்கு மாவட்டத்திலிருந்து திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்ட மகளிர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.எம்.மதுராசெந்தில் சிறப்புரை!

*நாமக்கல், அக். 11 -*

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டிற்கு செல்வதற்காக நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஞாயிற்றுக் கிழமை - 08.10.2023 அன்று காலை 10:30 மணியளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அவர்கள் தலைமையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி மற்றும் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் மற்றும் மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளர் மருத்துவர் மகேந்திரன் மற்றும் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி.அ.ரியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், தங்கவேல், பழனிவேல், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வம் நகர செயலாளர்கள் கார்த்திகேயன், செல்வம், ஞானசேகரன் பேரூர் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, சமூக வலைதள பொறுப்பாளர்கள் சார்ந்த துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவே ற்றப் பட்ட தீர்மானங்கள்

அக்டோபர் 14ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ திடலில் மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது பெண்ணுரிமை போற்றும் இந்த மாநாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இருந்து 1000க்கும் மேற்பட்ட கழகத்தின் மகளிர் அணி சார்ந்த அனைவரும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் அனைத்து மகளிர் சகோதரிகளையும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது எனவும், கழக மகளிர் அணியால் உருவாக்கப்பட்ட வினாடி வினா செயலியை அதிக பேர் பயன்படுத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், ஒன்றிய, நகர, பேரூர்களில் மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கையை தீவிர படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் மாவட்டக் கழகச் செயலாளர் பேசுகையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றிட கழக ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் இலவசப் பேருந்து பயணம், காலை உணவுத் திட்டம், மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி, புதுமை பெண் திட்டம், கொரோனா காலத்தில் குடும்ப தலைவிகளுக்கு நான்காயிரம் ரூபாய் வழங்கி இது போன்ற எண்ணற்ற பல சாதனைகளை செய்துள்ள கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி, மாவட்ட சமூக வலைதள பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



மன்னார்குடியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில் பணி ஆணைகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கி வாழ்த்தினார்.



திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர், மறைந்த அ.ராசேந்திரன் அவர்களின், உடலுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், வ.அன்பழகன், இரா.ஸ்ரீதரன், கே.வி.சேகரன், க.லோகநாதன், சேத்துப்பட் முருகன் உட்பட ஏராளமானோர் உடன் அஞ்சலி செலுத்தினர்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்ட

# அவைத்தலைவர் போளூர் அ.ராசேந்திரன் மறைவு!

## அமைச்சர் எ.வ.வேலு - கழக முன்னோடிகள் அஞ்சலி!

போளூர், அக். 11-

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான போளூர் அ.ராசேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் தகவலறிந்து பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கழக முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான போளூர் அ.ராசேந்திரன் அவர்கள் இயற்கை எய்தினார்.

இறுதி அஞ்சலிக்காக இவருடைய உடல் போளூர் அடுத்த தச்சாம்பாடி கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தது.

செய்தியை கேள்விப்பட்டவுடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவைத்துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகி



யோர், விரைந்து வந்து அவரது உடலுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், வேலூர் தி.அ.முகமது சகி, கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஓ.ஜோதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், வ.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், இரா. ஸ்ரீதரன், கே.வி.ராஜ்குமார் மாவட்ட துணைச்செயலாளர் க.லோகநாதன், நகர செயலாளர்கள் கோ.தனசேகரன், சேத்பட் முருகன், மாவட்ட அமைப்பாளர்கள் எவரஸ்ட் நரேஷ்குமார், என்.கே.பாபு உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

மறைந்த வழக்கறிஞர் அ.ராசேந்திரன் அவர்களுக்கு வயது 85. இவர் தி.மு. கழகத்தில் சேத்துப்பட்டு ஒன்றிய செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் என பல பொறுப்புகளில் பணியாற்றியவர். நான்கு முறை சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, 1989, 1996 ஆகிய சட்டமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்றார்.

போளூர் அடுத்த தச்சாம்பாடி கிராத்தில் இருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலகம், மயானத்தை சென்றடைந்தது. அங்கு அவருக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாலை அணிவித்து இரங்கல் உரை நிகழ்த்தினார்.

அவரது இரங்கல் உரையில் தச்சாம்படி கிராமத்தில் பிறந்து, ஊராட்சிமன்ற தலைவர், பால் கூட்டுறவு சங்கத்தலைவர், கூட்டுறவு வங்கித்தலைவர், சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகளை வகித்தவர் அ.ராசேந்திரன், திறமையான மூத்த வழக்கறிஞர். இவர் கழகத்திற்காக அரும்பாடு பட்டவர். இவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கழக தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

இறுதி ஊர்வலத்தில் கழக தோழர்களும், நிர்வாகிகளும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

### பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில்

# டயாலிசிஸ் இயந்திரம் மிக விரைவில் அமைக்கப்படும்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, அக். 11-

சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளிக்கையில் பாப்பிரெட்டிப்பட்டி மருத்துவமனையில் டயாலிசிஸ் இயந்திரம் மிக விரைவில் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதில்கள் வருமாறு:

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மைக்கல்பாளையம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் சின்ன தம்பிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதேபோல் 3 கிலோ மீட்டர் தொலைவில் அந்தியூர் அரசு மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருவதால், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மைக்கல்பாளையம் ஊராட்சி என்பது அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே, அத்தாணி, பர்கூர், சின்னதம்பி பாளையம், எண்ணமங்கலம் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மைக்கல்பாளையம் ஊராட்சியைப் பொறுத்தவரை 6,473 மக்கள் தொகை இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த துணை சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலே இருக்கிற எண்ணமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு eSanjeevani திட்டத்தின் கீழ் தொடர்பு ஏற்படுத்தி, அந்த கிராமத்து மக்களுக்குரிய மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்கு 30,000 மக்கள் தொகை வேண்டும், 8 கிலோ மீட்டர் இடைவெளியில் வேறு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கக்கூடாது விதி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலை ஏற்று, ஒன்றிய அரசின் அனுமதி பெற்று, தாமரைக்கரைப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கொடுமுடி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கொடுமுடி அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்கள் மற்றும் ஒரு பல் மருத்துவர் பணியில் இருப்பதாகவும், அதில் ஓரிரு மருத்துவர்கள் அடிக்கடி விடுப்பில் செல்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் அங்கே அந்த மாவட்ட சுகாதார அலுவலர்களோடு கலந்து பேசி, விடுப்பில் செல்பவர்களுக்கு பதிலாக புதிய மருத்துவர்களை அங்கே இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அதேபோல் பழைய Xray வசதி என்பது இப்போது படிப்படியாக நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலை ஏற்று, Digital Xray அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில், கொடுமுடி அரசு மருத்துவமனையில் ஒரு புதிய digital Xray அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும், புதிய Scan வசதி ஏற்படுத்தித் தருவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**நாகையில் மருத்துவக் கட்டிடங்கள் விரைவில் முடிக்கப்படும்**

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அவர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் புதிய கட்டிடங்களை கட்டுவதற்குரிய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித்துறையினர் அந்தக் கட்டடங்களை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மிக விரைவில் கட்டடங்களுக்கான அந்தப் பணிகள் தொடங்க அறிவுறுத்தப்படும்.

அதேபோல, அவர் சொல்லியிருப்பதைப்போல மருத்துவர்களின் நியமனம் என்பது, மிக விரைவில் MRB ஆல் தேர்வு செய்யப்படவிருக்கிற அந்த மருத்துவர்களின் மூலம் அங்கே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாப்பிரெட்டிப்பட்டி மருத்துவமனையில் மிக விரைவில் டயாலிசிஸ் இயந்திரம் அமைத்து தரப்படும்

108 Amnulanceஐ பொறுத்த வரைக்கும் 1,333 Ambulanceகள் செயல்பாட்டில் இருக்கின்றன. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் புதிய Ambulanceகளை தமிழ்நாட்டில் இயக்கி வைத்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அது வாங்குவதற்குரிய விதிமுறைகள் இல்லை. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.25 இலட்சம் தந்திருப்பதாகச் சொல்கிறார். அந்த ரூ.25 இலட்சம் வேறு ஒரு பயன்பாட்டிற்கு அந்த கடிதத்தை மாற்றி எழுதித் தருவாரேயானால் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதே மாதிரி RO Systemத்திற்கு ஏற்கெனவே அவர் கடிதம் தந்திருப்பதாக சொல்கிறார். Dialysisஐ பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு 100 புதிய இயந்திரங்களும், இந்த ஆண்டு 50 இயந்திரங்களையும் தந்து, எங்கேயெல்லாம் புதிய dialysis இயந்திரங்கள் வேண்டுமோ அங்கே தந்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கும் மிக விரைவில் அந்த RO system இயங்குமானால் 3 அல்லது 4 அங்கிருக்கின்ற தேவைக்கேற்ப dialysis இயந்திரங்கள் மிக விரைவில் பொருத்தப்படும்.

இவ்வாறு பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.

### காவிரி விவகாரம்: சட்டப் பேரவையிலிருந்து வம்பு செய்து வெளிநடப்பு!

# தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் பா.ஜ.க. செய்துள்ள அப்பட்டமான துரோகம்!

## "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 11 -

காவிரி விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையிலிருந்து பா.ஜ.க. வம்பு செய்து வெளிநடப்பு செய்துள்ளது தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள அப்பட்டமான துரோகம் என "தீக்கதிர்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 10 செவ்வாய்க்கிழமை

பாஜகவின் இரட்டை வேடம்

தமிழ்நாடு சட்டமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டுமென்றும், இதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் சட்டப் பேரவையிலிருந்து வெளி நடப்பு செய்திருப்பதன்மூலம் பாஜகவினர் தங்கள் இரட்டை வேட நாடகத்தை மீண்டும் அரங்கேற்றியுள்ளனர். கர்நாடகத்தில் பாஜகவி

அது வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டுமென்றும், இதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டு மென்றும் வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் சட்டப் பேரவையிலிருந்து வெளி நடப்பு செய்திருப்பதன்மூலம் பாஜகவினர் தங்கள் இரட்டை வேட நாடகத்தை மீண்டும் அரங்கேற்றியுள்ளனர். கர்நாடகத்தில் பா.ஜ.க.வினர் தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கூடாது என்று தொடர்ந்து அடம்பிடித்து வருகின்றனர். இரண்டு முறை அந்த மாநிலத்தில் நடைபெற்ற பந்த் போராட்டத்திற்கு பா.ஜ.க.வினர் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர். காவிரி மேலாண்மை வாரியம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு கூறிய போதும் ஒரு சொட்டு நீர் கூட தரக்கூடாது என கர்நாடக மாநில பா.ஜ.க.வினர் கூறுகின்றனர்.

காவிரி மேலாண்மை வாரியம் கூறியுள்ள குறைந்தபட்ச அளவு கூட தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்காத நிலையில் காவிரி டெல்டா பகுதியில் பயிரிடப்பட்ட பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதிர்ச்சியில் ஒரு விவசாயி உயிரிழக்கும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த பின்னணியில் தமிழ்நாட்டின் குரலை ஒருமனதாக கர்நாடகத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் எடுத்துச் சொல்லும் வகையில்தான் முதல்வர் கொண்டு வந்த தனித் தீர்மானம் அமைந்துள்ளது. தமிழகத்தின் நியாயத்தையும், விவசாயிகளுக்கும், உணவு உற்பத்திக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் முதல்வர் எடுத்துரைத்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றி யுள்ளன.

ஆனால் தமிழக பா.ஜ.க.வின் நிலை கர்நாடக பா.ஜ.க.வின் நிலையை ஆதரிப்பதாக அமைந்துள்ளது. தமிழக முதல்வரின் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்து தி.மு.க. அரசு இரட்டை நிலைப்பாடு எடுப்பதாக பொய்யுரைக்கிறார் வானதி சீனிவாசன். நதிகள் தேசியமயம் எனும் உடனடி சாத்தியமில்லாத விசயத்தையும், மாநில அரசுகளின் உரிமையை பறிக்கும் ஒன்றிய அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டத்தையும் தீர்மானத்தில் இணைக்க வேண்டுமென பா.ஜ.க. வம்பு செய்து வெளிநடப்பு செய்துள்ளது. இது தமிழ்நாட்டின் நலனுக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள அப்பட்டமான துரோகமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் - இன்று

# திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மறியல் போராட்டம்!

திருவாரூர், அக்11.

திருவாரூர் மாவட்டத்தில் காவேரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் காவிரியில் நீர்தர மறுக்கும் கர்நாடக அரசையும், ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து இன்று (11.10.2023) மாபெரும் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. இந்த போராட்டத்திற்கு அரசியல் இயக்கங் களும், வர்த்தகர்களும், சமூக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் விவசாயத்தில் பெரும்பங்கு வகிக்கும் காவிரி நீரை வைத்து அரசியல் இயக்கங்கள் தங்களின் நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் நிலையில், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் அண்டை மாநிலங்களுடன் கொண்டிருந்த நட்புறவால் காவிரி பெற்று தமிழ்நாட்டின் விவசாயத்தை செழிப்பாக்கினார். அதேபோல திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது நிலைப்பாட்டில் உறுதியாய் இருந்து, சட்ட முறைப்படி நமக்கு கிடைக்கவேண்டிய காவிரி நீரை பெற முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டுகொண்டிருக்கிறார். இந்த நிலையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் கர்நாடக அரசு தமிழ் நாட்டை வஞ்சித்து வருகிறது. ஒன்றிய பி.ஜே.பி. அரசும் மவுனம் காத்துவருகிறது.

தமிழ்நாட்டின் விவசாயத்தை காக்க காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கம் சார்பில் இன்று (11.10.2023 - புதன்கிழமை) ஒன்றிய அரசின் அலுவலகங்களை முற்றுகையிட்டு நடைபெறும் போராட்டம் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் போராட்டத்தை முழு வெற்றிபெற ஆதரவளிப்பது என எடுக்கப்பட்ட முடிவின்படி இன்று போராட்டம் முழு வீச்சில் நடைபெறுகிறது. இந்த போராட்டத்தில் அரசியல் இயக்கங்களும், வர்த்தகர் சங்கம் மற்றும் சமூக அமைப்புகளும் ஆதரவு அளித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

### போளூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# வழக்கறிஞர் இராஜேந்திரன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 11–

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன் (வயது 82) அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2023) மாலை இயற்கை எய்தினார்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கெ. பழனிசாமி

**அக்டோபர் 11 (2016)**



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி

**அக்டோபர் 11 (2002)**



இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கர்நாடகாவில் 57 சதவிகிதம் நீர் இருக்கிறது - மேட்டூரில் 8.5 சதவிகிதம் மட்டுமே உள்ளது!

# டெல்டா பயிர்களையும், உயிர்களையும் காப்பாற்றிட வாதாடிக் கொண்டிருக்கிறோம்!

### பேரவையில் முதல்வர் கொண்டு வந்த தீர்மானம்; நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, அக்.11 -**

**சட்டப்பேரவையில் காவிரி குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த தனித் தீர்மானத்தின் மீது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றுகையில், கர்நாடகத்தில் 57 சதவிகிதம் நீர் இருக்கிறது என்றும், மேட்டூரில் வெறும் 8.5 சதவிகிதம் மட்டுமே நீர் இருக்கிறது என்றும், பயிர்களையும், உயிர்களையும் காப்பாற்றிட வாதாடிக்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.**

அவை முன்னவர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் காவேரிப் பிரச்சினை குறித்து ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். இந்தத் தீர்மானத்தின்மீது இந்த மாமன்றத்தில் இருக்கின்ற தலைவர் பெருமக்கள், தங்களுக்குரிய கருத்துகளை, நல்ல ஆலோசனைகளோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் மைய கருத்து. அந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

**காவிரி வரலாற்றை நான் அறிவேன்**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினால்கூட, அவர்களது உரையின் கடைசியில் முடிக்கிறபோது, தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறியதற்காக நான் தனியாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எனக்கு இதுபோன்ற விவாதங்களெல்லாம் புதியதல்ல. 1989 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் காலத்திலேயே முதன்முதலாக இந்தத் துறையை நான் எடுத்திருந்தேன். அதன் பிறகு எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் இந்தத் துறையைதான் நான் வைத்திருப்பேன். இந்த முறையும் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆக, கிட்டத்தட்ட 25 ஆண்டுகாலமாக இந்தத் துறையை நான் கையாண்டு வருகிறேன். காவேரியின் ஆரம்பம் முதல் அப்போதெல்லாம் சாதாரணமாக Tribunal கேட்பதுதான் முக்கியமான பணியாக இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரையில், இதன் வரலாற்றை நான் அறிவேன். இதன் ஊடே ஊடே நான் வளர்ந்திருக்கிறேன். கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், ஜே.எச். படேல் அவர்கள் முதல் தற்போது முதலமைச்சராக இருக்கின்ற சித்தராமையா அவர்கள் வரையில் அனைத்து முதலமைச்சர்களுடனும் இது குறித்து நான் பேசியிருக்கிறேன், விவாதித்திருக்கிறேன். அதேபோன்று கேரள மாநிலத்தின் முல்லைப் பெரியாறு அணை.

அது குறித்தும் கேரள மாநிலத்திலுள்ள பல அமைச்சர்களைச் சந்தித்திருக்கிறோம். அடுத்து, கிருஷ்ணா நதி நீர் குறித்தும் ஆந்திராவிலுள்ள என்.டி. இராமாராவ் முதல் பாஸ்கர் ராவ் முதல் எல்லோரையும் சந்தித்திருக்கிறோம். ஆக, 3 மாநிலங்களிலிருந்தும் தண்ணீர் கேட்கிற வேலைதான் நமக்கு இருக்கிறது. அவற்றில் நமக்கு உரிமை உண்டு. ஆனால், அந்த பிரச்சினைகளில் சில நேரங்களிலே ஓர் அணுகுமுறையை கையாள வேண்டியிருக்கிறது. ஆனால், சில நேரங்களிலே மேலே இருக்கிறவர்கள், தண்ணீர் அவர்களிடமிருந்து வருகிறது என்பதற்காகவே, ஏதோ அவர்கள் மேல் நிலையில் இருப்பவர்கள் போலவும், இங்கே நண்பர் உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைபோன்று நாம் கேட்பது போலவும் நினைக்கிறார்கள். உச்சநீதிமன்றம் சொன்னாலும் கேட்பது இல்லை.

**பேபி டேம் கட்டும் முயற்சி**

முல்லைப் பெரியாறில் முழு கொள்ளளவில் தண்ணீர் நிரப்ப வேண்டும் என்று கேட்டபோது, என்ன சொன்னார்கள்? நீங்கள் பேபி டேமை-ஐ கட்டும் பணியை நிறைவேற்றிவிட்டு, 152 அடி வரை தண்ணீரை நிரப்பிக் கொள்ளுங்கள் என்றார்கள். பேபி டேமை-ஐ நாம் கட்ட வேண்டும். பேபி டேமை-ஐ கட்ட வேண்டுமானால் அதற்குத் தேவையான மணல், கல் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு போகவேண்டும். அதற்கு அனுமதிக்க முடியாது என்று வனத் துறையினர் கூறிவிட்டார்கள். கிட்டத்தட்ட ஆட்சிக்கு வந்ததிலிருந்து போராடியதன் விளைவாக, இப்போதுதான் வண்டியின்மூலம் பொருட்களை எடுத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். சரி, அப்பொருட்களை எடுத்துச் சென்று பேபி டேமை-ஐ கட்டலாம் என்றால், பேபி டேமை கட்டும் இடத்திற்கு முன்னால் 20 மரங்கள் இருக்கின்றன. அவை வனத் துறையின்கீழ் வருகிறது; ஆகையால், அந்த 20 மரங்களை வெட்ட விட மாட்டோம்; அவற்றில் கை வைக்கக் கூடாது என்கிறார்கள். நல்ல காலம் புயலினால் 10 மரங்கள் கீழே விழுந்துவிட்டன. இன்னும் கொஞ்ச மரங்கள்தான் நிற்கின்றன. ஆகையால் இப்படி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

**பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம்!**

அதேமாதிரி பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் நிலை என்ன? ஆனைமலையாறுநல்லாறு திட்டம் எப்போதோ முடிந்திருக்க வேண்டும். நான் இதுவரையில் இரண்டு time அனுப்பிவிட்டேன். ஆனைமலையாறுநல்லாறு திட்டத்தை நிறைவேற்றினால்தான் PAPயினுடைய பலனை நாம் அனுபவிக்க முடியும். அதற்காக அவர்களோடு நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இவை எல்லாவற்றையும் விட விடாக்கண்டன் கொடாக்கண்டனாக இருப்பது கர்நாடகம். அதோடும் நாம் வாதாடிக்கொண்டிருக்கிறோம். அவர்களிடம் நாம் என்ன கேட்கிறோம்? 'தண்ணீர் கொடு' என்று கேட்கிறோம். அந்தத் தண்ணீரைக்கூட எப்போது கேட்கிறோம்? அவர்களிடம் தண்ணீர் கேட்டால், என்ன சொல்கிறார்கள்? 'எங்களிடமே தண்ணீர் இல்லை; நாங்கள் எப்படி கொடுப்பது' என்கிறார்கள்.



இப்போது உதாரணத்திற்குச் சொல்கிறேன்; 10.9.2022 அன்று KR சாகரில் 96.69% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 47.60% இருக்கிறது. கபினியில் போன வருடம் இதேநாளில் 93.28% இருந்தது; இன்றைக்கு கபினியில் 27.38% இருக்கிறது. ஏரங்கியில் போன வருடம் 78.47% இருந்தது; இன்றைக்கு 89.45% இருக்கிறது. ஹேமாவதியில் போன வருடம் 98.05% இருந்தது; இன்றைக்கு 53.86% இருக்கிறது. இவை கர்நாடகா dams-ல் இருக்கிற தண்ணீரின் நிலவரமாகும். மேட்டூரில் போன வருடம் 95.61% இருந்தது; இன்றைக்கு 8.61% இருக்கிறது. ஆகவே, அவர்கள் இவ்வளவு தண்ணீர் வைத்திருப்பதால்தான் நாம் தண்ணீரைக் கேட்கிறோம். கர்நாடகாவிலுள்ள 4 அணைக்கட்டுகளின் இன்றைய சராசரி தண்ணீர் அளவு 66.226 TMC; அதாவது 57% தண்ணீர் இருக்கிறது. மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரின் அளவு 8.5%தான். ஆக, அங்கு தண்ணீர் இல்லாமல் இல்லை; கொடுக்க வேண்டும். அவர்கள், நிறைவாக தண்ணீர் இருக்கும் போது, தண்ணீர் கேட்டால், கொடுத்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள்.

சரி, தண்ணீரின் அளவு குறைந்து போனால் என்ன செய்ய வேண்டும்? தண்ணீரை pro rata basisல் கொடுக்க வேண்டும். எவ்வளவு தண்ணீர் இருந்தாலும், ஒரு கை அளவு தண்ணீர் இருந்தாலும் கூட, அதில் எனக்கு பங்கு உண்டு. அதை pro rata basisன்படி கொடுத்தாக வேண்டும். அதைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொல்கிறது. ஆனால், அது நடைமுறையில் இல்லை. அதற்காக நீதிமன்றத்தில் என்ன சொல்கிறோம், நாங்களே எல்லாவற்றையும் பார்க்க முடியாது - அதற்காக Cauvery Water Management Authority என்ற அமைப்பை போட்டிருக்கிறார்கள். Regulation Committee என்ற அமைப்பு அதன் கீழ் போட்டிருக்கிறார்கள். அந்த Authorityன் Chairmanக்கு அந்த power கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் எப்படி கேட்கிறார்கள் என்றால், அந்த Committeeக்கு இத்தனை நாட்கள் சேர்மேன்னே இல்லாமல் இருந்தார்கள். நாங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்ததையடுத்து, இப்போதுதான் Chairmanஐ நியமித்திருக்கிறார்கள். அவர்கள் டெல்லியில் உட்கார்ந்து பேசினால், தமிழ்நாடு என்று சொன்னாலே குறைத்துதான் பதில் சொல்வார்கள். ஆனால், நீதிமன்றத்தில் கேட்கிறபோது கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத்தையே மதிக்காத ஒரு போக்கு நாட்டில் நிலவுமானால், ஒன்றிய அரசு இதைப் பார்த்துக் கொண்டிருக்குமானால், பிறகு இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாடு எங்கே போய் நிற்கும்? எங்களுடைய உரிமை இது.

**தஞ்சாவூர் மாவட்ட பாசன முறை**

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசிய போது, எனக்கே நெஞ்சம் உலர்ந்துவிட்டது. நான் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன்; அங்கிருக்கிற பாசன முறை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பாசன முறை பற்றி எனக்குத் தெரியும். காவிரி, வெண்ணாறு, வெட்டாறு உள்ளிட்ட ஆறுகள் பற்றி எனக்குத் தெரியும். தஞ்சாவூரிலுள்ள ஓர் ஊரின் பெயரைச் சொன்னால், அந்த ஊரிலுள்ள ஆறுகளைப் பற்றி நான் சொல்வேன். அதேபோன்று, அங்குள்ள ஆறுகளைப் பற்றிச் சொன்னால், ஊரைப் பற்றிச் சொல்வேன். அரசலாறு என்றால் கும்பகோணம் போ. நசுவினி ஆறு என்றால் பட்டுக்கோட்டைக்கு போ. கோரையாறு என்றால் திருத்துறைப்பூண்டிக்குப் போ என்று ஆற்றைப் பற்றி சொன்னால் ஊரைப் பற்றிச் சொல்வேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகள் மற்றும் ஊர்கள் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரியும். கடந்த 25 ஆண்டுகளில் என்னை தலைவர் கலைஞர் அவர்கள் அவ்வாறு வடித்திருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் இல்லையென்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு தெரிந்த ஒன்றே ஒன்று, நெற் பயிரிடுவது. அவர்கள் சாப்பிடுவது சோறுதான்; அவர்களுக்குத் கூழ் குடிக்கத் தெரியாது. தஞ்சாவூர் மக்களுக்கு கூழ் தயாரிக்கத் தெரியாது. களி சாப்பிடத் தெரியாது. அவர்களுக்கு கேழ்வரகு பயிரிடத் தெரியாது. மக்காச்சோளம் வளர்க்கத் தெரியாது. நெல்லைத் தவிர எந்தப் பயிரையும் பயிரிடத் தெரியாது. வேண்டுமென்றால், ஊடு பயிராக கொஞ்சம் உளுந்தை மட்டும் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு நெல் பயிரிடுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அங்கு எந்தவிதமான factoryம் கிடையாது. ஒரு தொழிற்சாலை கிடையாது. அவர்கள் காலமெல்லாம் மண்ணோடு மண்ணாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும்படி இருந்தால், அதற்காக இந்த அரசாங்கம் போராடாமல் இருக்குமா? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'அழுத்தம் கொடுங்கள், அழுத்தம் கொடுங்கள்' என்று சொன்னார்கள். அழுத்தம் கொடுத்தால் மட்டும் வேலை முடிந்து விடும் என்று கருதுகிறீர்களா சார்? நீங்களேதான் சொன்னீர்கள், இல்லை முடியாது என்று.

அம்மா அவர்கள், இடைக்காலத் தீர்ப்பை Gazetteல் போட வேண்டுமென்று உண்ணாவிரதம் உட்கார்ந்தார்கள். அவர்கள் அதனை போடவில்லை. அதற்காக அம்மா அவர்கள் உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள்.

உடனே என்னவாயிற்று, டெல்லியில் நரசிம்மராவ் அவர்கள் நேராக ரெட்டி என்று ஒருவர் இருந்தார். அந்த ரெட்டி அங்கு போனார், இங்கு வந்தார், போய்விட்டார். இங்கு சென்னா ரெட்டி வந்து அம்மாவை பார்த்துவிட்டு போய்விட்டார். அதன் பிறகு சுக்லா வந்தார். இங்கு வந்து அம்மாவைப் பார்த்து, 'என்ன குறை' என்று கேட்டார்கள். காவிரியினுடைய இடைக்காலத் தீர்ப்பை Gazetteல் போட வேண்டுமென்று சொன்னார்கள். போட்டு விடுகிறோம் என்றார்கள். அதன் பிறகு அவர்கள் போடவில்லை. போடாமல் என்ன செய்தார்கள், Committee போடுகிறோம் என்றார்கள். அந்த Committeeயையும் போடவில்லை. ஆக, இடைக்காலத் தீர்ப்பையும் Gazetteல் போடவில்லை. இரண்டு Committee போடுகிறோம் என்று சொன்னார்கள். அதையும் போடவில்லை. அழுத்தம் கொடுத்துப் பார்த்தார்கள். அடுத்து என்ன செய்வது? அவ்வளவு பெரிய முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து, அழுத்தம் கொடுத்தே, அசையவில்லையே டெல்லி! அதுதான் உங்களுக்கும், எங்களுக்கும்இந்த 25 ஆண்டுக்கால அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன், நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே இதில் சாதிக்க முடியுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஒன்றும் செய்ய முடியாது.

எங்கு ஊர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்கூட கோத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்களுக்கு என்ன பிரச்சினை சொல்லுங்கள்? பாரதிய ஜனதா கட்சி அங்கு வந்து கேட்கவில்லையா? இங்கிருந்து போராடுகிறார்களா? அரசியல் கண்ணோட்டம் இதில் தேவையில்லை சார். அவரவர்களுக்கு ஒரு கட்சி உண்டு, அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பார்கள், எல்லாவற்றிலுமே அரசியலைப் பார்த்துக் கொண்டிருந்தால், நாம் மனிதனாக இருக்க முடியாது. சமுதாயத்தில் இருக்க முடியாது. மனிதாபிமானத்தோடு இருக்க முடியாது. ஆகவே, நீங்கள் செய்தீர்கள், நான் அதனை ஒத்துக்கொள்கிறேன். Supreme Court orderஐ Gazetteல் போடுவதாகச் சொன்னார்கள் அம்மா. அதைப் போட்டார்கள். நானே சொல்கிறேன், அம்மா அவர்கள்தான் அதை Gazetteல் போட்டார்கள். ஆகையால், உங்கள் ஆட்சியில் இருந்தபோது நீங்கள் செய்தீர்கள்.

நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது நாங்கள் செய்கிறோம். வேண்டுமென்றால், அரசியலில் குறை சொல்லிக்கொள்கிறோம். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் கிடையாது.

அடுத்து, நீங்கள்கூட அப்போது இதுகுறித்தெல்லாம் பேசினீர்கள். அதையெல்லாம் இப்போது பேசிக் கொண்டிருக்க வேண்டாம். இதுகுறித்து ஒவ்வொருவரிடமும், ஐயா, நீங்கள் பேசவில்லை, ஏன் பேசவில்லை என்று நான் கேட்டுக் கொண்டிருக்கமாட்டேன்.

இரண்டாவதாக, கடைசியாக முக்கியமான ஒன்றைச் சொன்னார்கள்; மற்றவர்களும் இங்கே சொன்னார்கள். பயிரையும், உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நாம் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு 8 நாள் என்றால், 8 டி.எம்.சி. தண்ணீரை dead storage வைத்துவிடுவார்கள். அதோடு மேட்டூர் damஐ மூடிவிடுவார்கள். அது அவருக்கே தெரியும். இன்னும் சொல்லப் போனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வீட்டிற்கு பின்புறம் ஒரு barrage இருக்கிறது. மற்ற இடங்களைவிட அங்கேயே அவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்கிறது. குடிதண்ணீர் கொடுத்தால் அதெல்லாம் நின்று போய்விடும். கூடிய மட்டும் குடிதண்ணீர் தருவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம். இன்னும் சொல்லப் போனால், என் ராசி, மழை ராசி. நிச்சயமாக, மழை வந்துவிடும். ஒன்றும் கவலைப்படாதீர்கள்.

**பேரவைத் தலைவர்:** நவம்பர், டிசம்பர் மாதங்கள் மழைக் காலம் தானே! நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை.

**அமைச்சர் துரைமுருகன்:** நான் என் ராசி என்று சொல்கிறேன். நீங்கள் மழைக் காலம் என்று சொல்கிறீர்களே! (சிரிப்பு) சரியானவர் சார், நீங்கள். (சிரிப்பு) எனவே, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்மானத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மான த்தைக் கொண்டு வந்ததற்காக அவருக்கும் இந்த மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து அமர்கிறேன்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.

---

## 2025ஆம் ஆண்டில் ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் மின்சார வாகன தொழிற்சாலைகள்!

# தமிழ்நாட்டில் வாகன தொழிற் புரட்சி உருவாகி வருகிறது என்றால் அது மிகையல்ல!

### தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 11 -

வரும் 2025 ஆம் ஆண்டில் ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் மின்சார வாகன தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட உள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் ஒரு வாகன தொழிற் புரட்சி உருவாகி வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல என "தினத்தந்தி" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

சுற்றுச்சூழலுக்கு ஏற்றது என்பதால் உலகம் முழுவதுமே இப்போது மின்சார வாகனங்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் வாகன இயக்கத்துக்கு 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆண்டுக்கு ஆண்டு பெட்ரோல்டீசல் தேவை அதிகரித்துக்கொண்டு இருப்பதால் இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் அளவும் கூடிக்கொண்டே செல்கிறது. விலையும் அதிகரித்து வருகிறது. கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் அந்நிய செலாவணியும் அதிகமாக செலவாகி பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே இதற்கு மாற்றாக மின்சார வாகனங்களின் பயன்பாடு மட்டுமல்லாமல் உற்பத்தியும் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்மூலம் பெட்ரோல்டீசல் தேவை குறைவதோடு வாகன உரிமை யாளர்களுக்கு செலவும் மிச்சமாகிறது. எனவேதான் மத்திய அரசாங்கமும் தமிழக அரசும் மின்சார வாகனங்களின் உற்பத்திக்கும் அதை வாங்குபவர்களுக்கும் பல சலுகைகளை அளித்துவருகின்றன. தமிழக அரசு மின்சார வாகனங்களுக்காக தனியாக ஒரு கொள்கையை வகுத்துள்ளது. மின்சார வாகனங்களின் 'நம்பர் பிளேட்' மற்ற வாகனங்களின் 'நம்பர் பிளேட்' போல இல்லாமல் பச்சை நிறத்தில் இருக்கும்.


தலையங்கம்
தினத்தந்தி
10.10.2023 (செவ்வாய்க்கிழமை)
தமிழ்நாட்டில் மின்சார வாகன புரட்சி!

அதைப்பார்த்த உடனேயே இது மின்சார வாகனம் என்று கண்டுபிடித்துவிட முடியும்.

மின்சார வாகனங்களின் விலை மற்ற வாகனங்களின் விலையைவிட அதிகமாக இருப்பதன் காரணம் இதில் பயன்படுத்தப்படும் லித்தியம் பேட்டரிதான். இந்த பேட்டரியை

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியது இருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் ஜம்முகாஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்ட லித்தியம் படிவங்களை வெட்டி எடுப்பதற்கு ஏலம்விடும் முயற்சியிலும் அர்ஜெண்டினா நாட்டில் லித்தியம் சுரங்கங்களை குத்தகைக்கு எடுக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. இந்த முயற்சிகளெல்லாம் வெற்றி பெற்றால் லித்தியம் பேட்டரி விலை குறையும் வாய்ப்பு இருக்கிறது.

இந்த நிலையில் தமிழக அரசு மின்சார வாகன தொழிற்சாலைகளை அதிக அளவில் தமிழ்நாட்டில் தொடங்கவும் பொதுமக்களிடம் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் எடுத்த முயற்சி நல்ல பலனை கொடுத்துள்ளது. இந்த ஆண்டு இருசக்கர மற்றும் 4 சக்கர மின்சார வாகனங்கள் கார்கள் விற்பனையை எடுத்துக்கொண்டால் கடந்த செப்டம்பர் மாதம் 20 ந்தேதி வரையில் 10 லட்சத்து 44 ஆயிரத்து 600 வாகனங்கள் விற்பனையாகி பெரிய சாதனை படைத்துள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு என்ன பெருமையென்றால் இதில் 40 சதவீதத்துக்கும் மேலான அதாவது 4 லட்சத்து 10 ஆயிரம் மின்சார வாகனங்கள் இங்கு தயாரிக்கப்பட்டவை. கிருஷ்ணகிரி ராணிப்பேட்டை காஞ்சீபுரம் கோயம்புத்தூர் செங்கல்பட்டு திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் இந்த மின்சார வாகனங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சென்னை கோயம்புத்தூர் திருச்சி மதுரை சேலம் திருநெல்வேலி ஆகிய 6 நகரங்களை மின்சார வாகனங்களின் கேந்திரமாக உருவாக்க அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகிலேயே மின்சார வாகன தலைநகரமாக உருவாக்கிவிட வேண்டும் என்ற இலக்கில் தமிழக அரசு அதை அடைவதற்கான உற்பத்தி சூழ்நிலைகளை உருவாக்கிவருகிறது. ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டில் 2025ம் ஆண்டில் மிகப்பெரிய மின்சார வாகன தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட இருக்கின்றன. இதன் மூலம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மின்சார வாகன தொழிலில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சி உருவாகி வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் ஆலோசனைகளை வழங்கினார். இதில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலை தீ விபத்தில் - சிகிச்சை பலனின்றி

# உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.11-

விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்கூறி நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கர்செவல் கிராமத்திலுள்ள தனியாருக்குசொந்தமான பட்டாசு ஆலையில் 3.10.2023 அன்று ஏற்பட்ட தீவிபத்தில் மூன்று தொழிலாளர்களுக்கு கொடுங்காயம் ஏற்பட்டு மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் கங்கர்செவல், க.லட்சுமியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த கணேசன், த/பெ. பிலாவடியான் (வயது 42) மற்றும் ராஜா, த/பெ.வர்கீஸ் (வயது 38) ஆகியோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி கணேசன், த/பெ. பிலாவடியான் 7.10.2023 அன்றும், ராஜா, த/பெ. வர்கீஸ் இன்றும் (10.10.2023) உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் திருமதி.முத்தம்மாள், க/பெ. மாரிமுத்து என்பவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பெண் ஓதுவார்கள் நியமனம்!

## பூசாரிகள் சங்கம் வரவேற்பு!

சேலம், அக்.11-

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம் செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை திங்கள்கிழமை 9ம் தேதி காலை 8 மணி அளவில் நேரில் அவரது இல்லத்தில் சந்தித்து பொன்னாடை அணிவித்து பி.வாசு பூசாரி வாழ்த்து தெரிவித்தார்.

கோவில் பூசாரிகள் நலச் சங்க பொருளாளர் கே.சுந்தரம், பூசாரியின் குரல் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பெண் ஓதுவார்களை நியமித்து ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்திவரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

கிராமக் கோவில் பூசாரிகள் நலவாரியத்தை விரைந்து செயல்படுத்தக்கோரி அமைச்சரிடம் அவர் கோரிக்கை மனு அளித்தார். நலவாரியத்தைச் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# 51 ஊராட்சிகளில் வாக்குச்சாவடி பாக முகவர்களுக்காக (BLC) இரண்டாம்கட்ட ஆய்வுக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் வீதம் மாவட்டத்திலுள்ள 9 ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட 51 ஊராட்சிகளில் வாக்குச் சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆய்வு கூட்டமானது கீழ்கண்ட அட்டவணை படி நடத்தப்பட உள்ளது.

| வ. எண் | நாள் | நேரம் | ஊராட்சி | இடம் |
|---|---|---|---|---|
| | | அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | | |
| 1 | 18.10.2023 புதன் | மாலை 4 மணி | தேரேகால்புதூர், இராமபுரம், நல்லூர் | விஸ்வா திருமண மண்டபம், நல்லூர் |
| 2 | 18.10.2023 புதன் | மாலை 6 மணி | இரவிபுதூர், குலசேகரபுரம் | விஸ்வா திருமண மண்டபம், நல்லூர் |
| 3 | 22.10.2023 ஞாயிறு | மாலை 4 மணி | லீபுரம் | திரு. குமாரதங்கம் ஆசிரியர் அவர்களின் இல்ல வளாகம், ஆமணக்கன்விளை |
| | | அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | | |
| 4 | 19.10.2023 வியாழன் | மாலை 4 மணி | வடக்கு தாமரைகுளம், சாமிதோப்பு, கடும்பாட்டூர் | திரு. பொன் சின்னத்துரை அவர்களின் இல்ல வளாகம், சாமித்தோப்பு |
| 5 | 19.10.2023 வியாழன் | மாலை 6 மணி | மகாராஜபுரம், பஞ்சலிங்கபுரம் | திரு. டி.கே. சுந்தரம் அவர்களின் இல்ல வளாகம், பஞ்சலிங்கபுரம் |
| 6 | 22.10.2023 ஞாயிறு | மாலை 6 மணி | கோவளம் | திரு. ஜோசப் முத்தழகன் அவர்களின் இல்ல வளாகம், கோவளம் |
| | | குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | | |
| 7 | 20.10.2023 வெள்ளி | மாலை 4 மணி | தலக்குளம், கக்கோட்டுதலை, நெட்டாங்கோடு, கட்டிமாங்கோடு | எஸ்.ஆர். சுவாமி மண்டபம், மடவிளாகம், கண்டன்விளை |
| 8 | 21.10.2023 சனி | மாலை 4 மணி | சைமன் காலனி | புனித மிக்கேல் திருமண மண்டபம், கோடிமுனை |
| | | குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | | |
| 9 | 21.10.2023 சனி | மாலை 6 மணி | முட்டம் | ஜார்ஜியார் தெரு, குருசடி வளாகம், முட்டம் |
| 10 | 29.10.2023 ஞாயிறு | காலை 11 மணி | குருந்தன்கோடு, வெள்ளி சந்தை | பத்மனாபா கல்யாண மண்டபம், வெள்ளி சந்தை |
| | | இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | | |
| 11 | 22.10.2023 ஞாயிறு | காலை 10 மணி | கேசவன்புத்தன்துறை, மணக்குடி, பள்ளம் | கிராண்ட் லாட்ஜ் ஆஃப் இந்தியா, பள்ளம் |
| 12 | 27.10.2023 வெள்ளி | மாலை 4 மணி | ஆத்திக்காட்டுவிளை, மேல கிருஷ்ணன்புதூர், பறக்கை | கிரேஸ் கார்டன், சீயோன்புரம் |
| 13 | 27.10.2023 வெள்ளி | மாலை 6 மணி | தர்மபுரம் | ராமநாயகி மண்டபம், ஈத்தாமொழி |
| | | தக்கலை தெற்கு ஒன்றியம் | | |
| 14 | 25.10.2023 புதன் | மாலை 4 மணி | நுள்ளிவிளை | ஜெ.ஜெ. மண்டபம், கண்டன்விளை |
| 15 | 25.10.2023 புதன் | மாலை 5.30 மணி | ஆத்திவிளை | சி.எஸ்.ஐ. கம்யூனிட்டி ஹால், நெய்யூர் |
| 16 | 25.10.2023 புதன் | மாலை 7 மணி | மருதூர்குறிச்சி | மருதூர்குறிச்சி, திரு. பிரேம் அவர்களின் இல்ல வளாகம் |
| | | இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | | |
| 17 | 26.10.2023 வியாழன் | மாலை 4 மணி | எள்ளுவிளை, மேல சங்கரன்குழி, இராஜாக்கமங்கலம் | சமூதாய நலக்கூடம், அம்மச்சியார்விளை, ஈத்தாமொழி |
| 18 | 29.10.2023 ஞாயிறு | மாலை 4 மணி | கனியான்குளம், புத்தேரி | யோகீஸ்வரர் திருமண மண்டபம், புத்தேரி |
| | | தோவாளை கிழக்கு ஒன்றியம் | | |
| 19 | 28.10.2023 சனி | மாலை 4 மணி | ஈசாந்திமங்கலம், இறச்சகுளம், திருப்பதிசாரம், பீம நகரி | ஆர்.கே. மஹால், இறச்சகுளம் |
| 20 | 28.10.2023 சனி | மாலை 6 மணி | தோவாளை, செண்பகராமன்புதூர், சகாய நகர், மாதவலாயம் | கிராண்ட் திருமண மண்டபம், சண்முகபுரம் |
| | | தோவாளை வடக்கு ஒன்றியம் | | |
| 21 | 30.10.2023 திங்கள் | மாலை 4 மணி | தடிக்காரன்கோணம், காட்டுபுதூர், கடுக்கரை, திடல் | சமூக நலக்கூடம், தெரிசனங்கோப்பு |
| 22 | 30.10.2023 திங்கள் | மாலை 6 மணி | தெரிசனங்கோப்பு, தெள்ளாந்தி, ஞாலம், அருமநல்லூர் | சமூக நலக்கூடம், தெரிசனங்கோப்பு |

**மேயர் ரெ. மகேஷ்**
செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

ஓய்வூதியதாரர்களின் இன்ஸூரன்ஸ் பிரீமியத்தை நிர்வாகமே செலுத்த வேண்டும்

# ஒப்பந்த தொழிலாளர்கள் பணி அமர்த்துவதை தடை செய்யவேண்டும்!

## பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழில் சங்கத் தலைவர்கள் வலியுறுத்தல்

திருச்சி, அக்.11-

பாரத ஸ்டேட் பேங்க் மேனாள் தொழிற் சங்க தலைவர்கள்கூட்டமைப்பின் ஏழாவது பொதுக்குழு கூட்டம் ஹோட்டல் அஜந்தாவில் நடந்தது. அமைப்பின் தலைவர் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்த கூட்டத்துக்கு பொருளாளர் திருச்சி என்.சுப்பிரமணியன், துணைத்தலைவர் டி.வி.சந்திரசேகரன், துணைச் செயலாளர் மதுரை எம்.முருகையா, பாரத ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுக்குழு கூட்டத்தில் நீண்ட விவாதங்களுக்கு பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனையில் இருக்கும் குற்றவியல் நீதி சட்ட திருத்தங்களை நாடு தழுவிய அளவில் பொது விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும்.

மணிப்பூர் மாநிலத்தில் இந்திய ராணுவத்தின் விசேச சட்டத்தை நடைமுறைப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த ஒன்றிய அரசு முன் வர வேண்டும்.

பாரத ஸ்டேட் பேங்க் உள்ளிட்ட பொதுத்துறை வங்கிகளில் தொழிலாளர் நல சட்டங்களுக்கு எதிராக 'அவுட் சோர்சிங்' மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதை ஒன்றிய அரசு தடை செய்ய வேண்டும்.

பாரத ஸ்டேட் வங்கியின் நிகர இலாபம் கடந்த ஆண்டை காட்டிலும் 59 சதவிகிதம் உயர்ந்து, 2023 ஆம் நிதியாண்டின் இறுதியில் 50232 கோடியாக உயர்ந்துள்ளது.

ஓய்வூதியர்களும், அர்ப்பணித்துக் கொண்டு உழைக்கும் அதிகாரிகளும், வங்கியையே உயிர்மூச்சாக கருதி உழைக்கும் ஊழியர்களும் தான் என்பதை நாடு நன்கறியும். வங்கியின் வளர்ச்சிக்காக வாழ்நாளையே அர்ப்பணித்துக்கொண்டு உழைத்த ஓய்வூதியர்களை வங்கி நிர்வாகம் சமூக கழிவாக (Social waste) கருதி விடக்கூடாது. நாடு முழுமையும் ஓய்வு பெற்ற பின்னரும் செயல்பட்டு பாரத ஸ்டேட் வங்கியின் டெபாசிட்டை உயர்த்தவும் வராத கடன்களை திரும்ப பெறவும் துணை நிற்கும் ஓய்வூதியர்களுக்கான ஹெல்த் இன்சூரன்ஸ் பாலிசி(பி) இன்சூரன்ஸ் பிரீமியத்தை முழுமையாக பாரத ஸ்டேட் வங்கி நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள 38 மாவட்ட தலைநகரங்களில் பலவற்றில் வங்கி மருந்தகங்கள் நிறுவப்படாததால், வங்கி ஓய்வூதியர்கள் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நிலை மாற, வங்கி மருந்தகங்களை நிறுவும் முயற்சிகளை துரிதப் படுத்த வேண்டும்.

அனைத்து வங்கி மருந்தகங்களிலும் தகுதியான மருத்துவரால்பரிந்துரைக்கப்படும் தரமான மருந்துகள், மாத்திரைகள், பென் இன்சுலின் ஆகியவற்றை வங்கியின் வேலை நாட்கள் அனைத்திலும் ஓய்வூதியர்களுக்கு வழங்க பாரத ஸ்டேட் வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். பாண்டிச்சேரி போன்ற யூனியன் பிரதேச தலைநகர்களில் வாழும் வங்கி ஓய்வூதியர்களின் எண்ணிக்கையை கவனமாக கருத்தில் கொண்டு, அவர்கள் அனைவருக்கும் தரமான மருந்துகள் மற்றும் பென் இன்சுலின் உரிய நேரத்தில் வழங்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டால் உடல் நலக்குறைவுகளும், உயிரிழப்புகளும் தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை உணர்ந்து, கருத்தோடும் கவனத்தோடும் நிர்வாக முடிவுகளை பாரத ஸ்டேட் வங்கி எடுக்க வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**பங்கேற்றோர்**

இந்தஅமைப்பில் ஏழாவது பொதுக்குழுவில் துணை பொருளாளர் பூமிநாதன், திருச்சி சந்திரா கில்பர்ட், திருவாரூர் பாண்டுரெங்கன், பாண்டிச்சேரி எஸ்.கருணாகரன், கோவை எம்.ரகுநாதன், வேலூர் லோகநாதன், மதுரை பரவை பாலசுப்பிரமணியன், நாகர்கோயில் அஹமது ஹுசைன் மற்றும். அமைப்பின் செயலாளர் எம்.கே.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல்வர் அறிவிப்பிற்கு பின் 10 நாட்களில் மட்டும் உடல் உறுப்பு தானம் செய்தோர் 1,616 பேர்!

# சமூக ஆர்வலர்கள் - பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக்.11-

உடல் உறுப்புத்தானம் குறித்த முதல்வரின் அறிவிப்பிற்கு பின் 10 நாட்களில் மட்டும் உடல் உறுப்பேபுத் தானம் செய்தோர் எண்ணிக்கை 1,616 பேராக உயர்ந்துள்ளது. இதனால் தமிழ் நாடு அரசின் அறிவிப்புக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்
அக்டோபர் 10, 2023 செவ்வாய்க்கிழமை

பாராட்டு குவிகிறது

மூளைச்சாவு அடைந்த பிறகு உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது பெரும் வரவேற்புக்குரியது.

உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது தமிழ்நாடு. தமிழ்நாடு அரசு உடல் உறுப்பு தானத்துக்காக தனி நாளாக செப்டம்பர் 23ஐ அறிவித்து, முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளை தானம் செய்ய முடியும். அரசின் புதிய அறிவிப்பு உறுப்பு தானத்தை மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

தமிழ்நாட்டில் 6,179 பேர் மாற்று சிறுநீரகக்க...

அது வருமாறு:

மூளைச்சாவு அடைந்த பிறகு உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது பெரும் வரவேற்புக்குரியது. உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது தமிழ்நாடு. தமிழ்நாடு அரசு உடல் உறுப்பு தானத்துக்காக தனி நாளாக செப்டம்பர் 23ஐ அறிவித்து, முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளை தானம் செய்ய முடியும். அரசின் புதிய அறிவிப்பு உறுப்பு தானத்தை மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.

தமிழ்நாட்டில் 6,179 பேர் மாற்று சிறுநீரகத்துக்காகவும், 449 பேர் கல்லீரலுக்காகவும் 72 பேர் இதயத்துக்காகவும், 24 பேர் நுரையீரலுக்காகவும் காத்திருக்கின்றனர். நாட்டில் அதிகமாக உடல் உறுப்பு தேவை இருக்கிறது. நாடு முழுவதும் சுமார் 3 லட்சம் பேர் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். நாளொன்றுக்கு 20 பேர் வரை உடல்உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை கிடைக்காததால் இறக்க நேரிடுகிறது.

ஆனால், சர்வதேசப் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் உடல் உறுப்பு தானம் மிகக் குறைவு.

மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்பு தானம் 2014ல் 6,916 பேரிலிருந்து 2022ல் 16,041 பேராக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால், கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் 10 லட்சத்தில் ஒருவர் தான் உறுப்பு தானம் செய்கிறார் என்னும் நிலை தொடர்கிறது.

இந்தியாவில் 600க்கு மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஆண்டுக்கு ஒன்று என்னும் வீதத்தில் உறுப்பு தானம் கிடைத்தால் இந்தியாவின் மருத்துவத் துறைக்குப் பெரிய வரமாக இருக்கும். ஆனால், உடல் உறுப்புக்காக காத்திருப்போரில் 10% பேர் மட்டுமே இப்போது பயனடைய முடிகிறது.

இந்த பின்னணியில் உறுப்பு தானம் செய்வதை ஊக்குவிக்க, உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மருத்துவர்களையும் செவிலியர்களையும் தமிழ் நாடு அரசு ஏற்கனவே அறிவுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. உடல் உறுப்புகளை தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழக அரசு அறிவிப்பு வெளியான பிறகு தேனி மாவட்டம் சின்னமனூரில் சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்து, உடல் உறுப்புகளை தானம் செய்த வடிவேலுவின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடந்தது. அதை தொடர்ந்து உறுப்பு தானம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, உறுப்பு செயல் இழந்தோரின் எதிர்கால வாழ்க்கைக்கான வாய்ப்பை வழங்குகிறது. ஆனாலும் உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் பல சவால்கள் உள்ளன. காத்திருப்போருக்கு வரிசைப்படியும் சரியாகவும் உறுப்புகள் சென்று சேர்வதில் பிரச்னைகள் நிலவுகின்றன. என்றாலும் இப்போது காத்திருப்போர் பட்டியலில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பலன் அளித்து வருகின்றன.

இதையடுத்து இறந்தவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் தானாகவே முன் வந்து உறவினர்களின் உடல் உறுப்புகளை தானமாக வழங்கி வருகின்றனர். உடல் உறுப்புகளைத் தானம் செய்வோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தி வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்த 10 நாட்களில் மட்டும் 1,616 பேர் உறுப்புகள் தானம் செய்ய உறுதியெடுத்து பதிவு செய்துள்ளனர். இதனால் தமிழ்நாடு அரசின் அறிவிப்புக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பாராட்டு குவிகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# காளையார்கோவிலில் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## ஆ.ராசா.எம்.பி. சிறப்புரை! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் பங்கேற்பு

சிவகங்கை. அக். 11-

காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வருகிற 17ஆம் தேதி காளையார் கோவில் தெப்பக்குளம் கீழ்கரையில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் 7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஷ்ணகுமார்,ஆர். எம்.கென்னடி ஆகியோர் வரவேற்றுப் பேசுகிறார்கள்.

கிழக்கு ஒன்றியச் செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா. எம். பி.சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுகிறார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

கூட்டத்தில் பாகமுகவர்களுக்கு கைபேசிகள், நலிவுற்ற ஏழை,எளிய மாணவ, மாணவிகளுக்கு கல்விநிதி உதவி,தொண்டு நிறுவனங்களுக்கு அரிசி முட்டைகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.ராசாஎம்.பி. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் வழங்குகிறார்கள்.



சிவகங்கையில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வலியுறுத்தி நடைபெற்ற ரயில் மறியல் போராட்டத்தை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையாக சிவகங்கை நகர மன்ற தலைவர் சிஎம். துரைஆனந்த் தலைமையில் அனைத்துக் கட்சி பொதுநல அமைப்புகள் பத்திரிகையாளர்கள் அனைத்து சங்கங்கள் சார்பில் டெல்லி சென்று ஒன்றிய ரயில்வே துறை இணை அமைச்சர் ராவ் சஹீப் பட்டீல் தானேவ்வை நேரில் சந்தித்து மனு அளித்து கோரிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது அந்தக் கோரிக்கைகளில் முதலில் ஐந்து கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி தருவதாக ரயில்வே துறை இணை அமைச்சர் உறுதியளித்தார். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஜெய்சிம்மன், நகர மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், அயூப்கான், துபாய் காந்தி, மகேஷ், விஜயகுமார், ராமதாஸ், ஆறு.சரவணன் லயன்ஸ் சங்கம்மாவட்ட தலைவர் முத்துக்கண்ணன், ஒப்பந்ததாரர் சங்கம் கண்ணன் உள்ளிட்டோர் அனைத்துக் கட்சிகள், அனைத்து சங்கங்கள், பொதுநல அமைப்புகள் சார்பில் பிரதிநிதிகளாக பங்கேற்றனர்.

## எஸ்.புதூர் ஒன்றியத்தில்

# 511 மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, அக். 11 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி எஸ். புதூர் பாரிவள்ளல் ஒன்றியத்திற்குட்பட்ட உலகம் பட்டி, வி.புதூர், கட்டுகுடி பட்டி, கரிசல்பட்டி, முசுண்டபட்டி, கட்டுகுடி பட்டி அரசு மாதிரி பள்ளி ஆகிய ஏழு பள்ளிகளில் உள்ள 511 மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசுந்தரம் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெரிய கருப்பன் பேசுகையில் பத்தாம் வகுப்பு, பிளஸ் டூ தேர்வில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் முப்பதாயிரமும், இரண்டாவது இடம் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு தலா ரூபாய் 5000 வீதம் ரூபாய் 15000ம் மூன்றாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபாய் 3000 வீதம் ரூபாய் 9000 ஆக மொத்தம் ரூபாய் 54,000 ஊக்கத்தொகை மற்றும் புரவலர் நிதியாக ரூபாய் 10, ஆயிரம் ஆக மொத்தம் ரூபாய் 64ஆயிரத்தினை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பொன்மணி பாஸ்கரன், முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து, வட்டாட்சியர் சாந்தி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய செயலாளர் செல்வராஜ், உட்பட அரசு அதிகாரிகள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் கலந்து கொண்டார்கள் .

### கால்நடை மருந்தகம் திறப்பு விழா

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியம் மித்ரா வயலில் தரம் உயர்த்தப்பட்ட புதிய கால்நடை மருந்தகத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், கோட்டாட்சியர் பால்துரை, ஒன்றிய குழு தலைவர் திருமதி சரண்யா, கால்நடை மருத்துவதுறை இணை இயக்குனர் பொறுப்பு கார்த்திகேயன், உதவி இயக்குனர் எஸ். எம். பாலசுப்பிரமணியன் , மாவட்டக் கழக துணை செயலாளர். த.சேங்கை மாறன், ஊராட்சி மன்ற தலைவர் ஐஸ்வர்யா, வட்டாட்சியர் தங்கமணி, ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னதுரை கே.ஆர். ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் உட்பட அரசு அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

## கழகத்தின் தொடக்கக் காலத் தூண்களாக விளங்கிய ப.உ.ச. - இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா எடுத்த

# அமைச்சர் எ.வ.வேலு - திருவண்ணாமலை மாவட்டக் கழகத்திற்கு பாராட்டுகள்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 11–

“கழகத்தின் தொடக்கக் கால தூண்களாக விளங்கிய முன்னாள் அமைச்சர் ப.உ.ச., தி.மு.கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா எடுத்த பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருக்கு பாராட்டுகள்” என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் ஜனநாயக இரும்புக் கோட்டையின் தொடக்கக் காலத் தூண்களாக விளங்கிய திருவண்ணாமலை மாவட்டம் தந்த கழகத் தீரர்கள் ப.உ.சண்முகம், இரா.தர்மலிங்கம் ஆகியோரின் நூற்றாண்டு விழா மிக எழுச்சியுடன் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

### திருவண்ணாமலை மாவட்டத்தின் கொள்கைப் பற்று!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் ஆண்டில் அவரது சம வயது கழகத் தோழர்களுக்கும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் கொள்கைப் பற்றையும் நன்றியுணர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

தி.மு.க. தொடங்கப்பட்ட சூழலில் திருவண்ணாமலை நகர்மன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூடியவர் ப.உ.சண்முகம். அப்போதே தலைவர் கலைஞரின் உற்ற தோழராகத் திகழ்ந்தவர். 1963இல் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க வேட்பாளராக ப.உ.ச. பெற்ற பெருவெற்றி 1967 இல் கழகம் ஆட்சிக்கட்டிலில் அமர்வதற்கு ஊக்கமளித்தது.

### பேரறிஞர் அண்ணாவின் அன்புக்குரியவர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.தர்மலிங்கம் 1957 முதல் 1967 வரை 10 ஆண்டுகாலம் கழகத்தின் குரலாக நாடாளுமன்றத்தில் முழங்கி மொழி உரிமை, மாநில உரிமை, மக்கள் நலன் காத்தவர். இருவரும் பேரறிஞர் அண்ணாவின் பேரன்புக்கு உரியவர்கள். தலைவர் கலைஞர் அவர்களால் ப.உ.ச. வுக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. ‘டில்லிக்கு பாதுஷா திருவண்ணாமலைக்கு ப.உ.ச’ எனப் புகழப்பட்டவர்.

### மூத்தோரின் தியாகம் போற்றிக் கழகம் காப்போம்!

இருவரின் தொண்டினையும் கொள்கைப் பற்றையும் கழக இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழா எடுத்த அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருக்கு என் பாராட்டுகள். மூத்தோரின் தியாகம் போற்றிக் கழகம் காப்போம் எந்நாளும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிவகங்கை மாவட்டத்தில் –

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூட்டத்தில் பெருமளவில் இளைஞர்கள் பங்கேற்பு!

## சிவகங்கை தெற்கு ஒன்றியக் கூட்டத்தில் முடிவு!

சிவகங்கை, அக். 11 - சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் பஞ்ச வண்ணம் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் திலகவதிகண்ணன், செல்வராணிஅய்யப்பன், மாவட்ட மகளிரணி துணை அணிப்பாளர் மார்க்ரெட் கமலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் இளைஞர் அணி தங்கச் செல்வம், சு.மனோகரன், தியாகராஜன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், தவச்செல்வம், அழகு சுந்தரம், தங்கச்சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், வேல்முருகன், ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இம்மாதம் 27ஆம் தேதி வரை கூட்டுறவு சங்க உறுப்பினர்களை தெற்கு ஒன்றியத்தில் அதிக அளவில் சேர்ப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

இந்த மாதம் சிவகங்கை மாவட்டத்திற்கு இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் தெற்கு ஒன்றியத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர்களை பங்கேற்க செய்வது. வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர் சேர்ப்பதில் தீவிரமாக பணிபுரிய தீர்மா னிக்கப் பட்டது .

முடிவில் தங்க செல்வம் நன்றி கூறினார்.

## இதுவரை ரூ.5,330 கோடி மதிப்புள்ள கோயில் சொத்துக்கள் மீட்பு!

# வரலாற்றுச் சாதனையாக 1,077 கோயில்களில் குடமுழுக்கு!

## பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!



சென்னை, அக்.11 - தமிழ்நாட்டில் இதுவரை ரூ.5,330 கோடி மதிப்புள்ள கோயில் நிலங்கள் மீட்கப் பட்டுள்ளதாகவும், வரலாற்றுச் சாதனையாக இதுவரை 1,077 கோயில்களில் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளதாகவும் சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு பதிலளிக்கையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

அது வருமாறு:-

**தி. வேல்முருகன்:** என்னுடைய சொந்தக் கிரமமான புலியூர், கடலூர் மாவட்டத்தில் நூற்றாண்டுகளைக் கடந்த முருகன் கோயிலை புதியதாகக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

45 ஆண்டுக் காலத்திற்கு மேலாக, சுமார் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு சொந்தமான கோயில் நிலத்தை தனி நபர் ஒருவர் குத்தகை என்ற பெயரில் ஆக்கிரமித்து அனுபவித்து வைத்திருந்தார். பல ஆண்டுகளாக, பல முயற்சிகளை நான் மேற்கொண்ட போதும், அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் இருந்தது. நான் இந்த அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, முதலமைச்சர் அவர்கள் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும், தமிழக முதல்வர் அவர்களின் சட்டத்தின் ஆட்சியின் துணைக் கொண்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு சொந்தமாக்குவோம் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். தற்போது ரூ.100 கோடி பெருமானமுள்ள இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு சொந்தமான சொத்துகள் மீட்டெடுத்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தம் ஆறரை ஏக்கரில், பிரதான காலியிடம் பேருந்து நிலையம் அருகில், இரண்டரை ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. ரூ.300 கோடி மதிப்புள்ள மீதமுள்ள சொத்துகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எடுத்த நடவடிக்கைக்கு தங்கள் துறைக்கும், ஒத்துழைப்புத் தந்த வருவாய் மற்றும் காவல் துறைக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு:** இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், கருத்து குருடர்களாக இருக்கும் பலர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை தமிழ் நாட்டிலே, ஆக்கிரமிப்புகளை மீட்டெடுத்த சொத்துகளின் முழு விவரம் தெரியாமல் கூறிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றப் பிறகு, ரூ.5,330 கோடி அளவிற்கு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, திருக்கோயில்கள் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கின்ற ஒரு பகுதியைச் சார்ந்தவர்களிடமிருந்து, 9 ஆக்கிரமிப்புகள் அவர்களிடமிருந்து மாத்திரம், 700 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆட்சியில் சொத்துகள் மீட்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, நம்முடைய உறுப்பினர் தி.வேல்முருகன் அவர்கள் கடந்த ஆண்டு வைத்த கோரிக்கை நிறைவேற்றியிருக்கின்றோம். இப்போது வைத்திருக்கின்ற கோரிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கு தமிழக முதல்வர் அவர்களின் உதவியோடு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இரா. அருள்:** சமீபத்தில் சேலம் சொக்கனேஸ்வர் திருக்கோயிலுக்கு அருமையான குடமுழுக்குத் பெரு விழா நடைபெற்றது. இம்மாதம் 26-ஆம் தேதி சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த குடமுழுக்கு விழாவை தமிழிலே அர்ச்சனை செய்யவேண்டும். சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழகம் முழுவதும் உள்ள மாரியம்மன் சாமி நம்ம ஊர் சாமி. அந்த மாரியம்மன் திருகோயில் குடமுழுக்கு திருவிழாவை தமிழிலே நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ். அதில் தான் முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அண்மையிலே பழனி திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு நன்னீராட்டு விழாவிலேகூட தமிழிலே அர்ச்சனை செய்யப்பட்டது. திருக்கோயில்களிலே அன்னைத் தமிழில் வழிபாடு என்ற ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு, 48 முதுநிலை கோயில்களில் இப்போது அன்னைத் தமிழில் அர்ச்சனை நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றது. படிப்படியாக அன்னைத் தமிழில் அர்ச்சனை அனைத்துக் கோயில்களிலும் கொண்டு வரப்படும். அர்ச்சகர்களை ஊக்குவிக்கின்ற வண்ணம், அர்ச்சகர்களுக்குண்டான கட்டணத்தில் 60 சதவிகிதம் அர்ச்சகர்களுக்கே வழங்கப்படுகிறது.

உறுப்பினர் அருள் அவர்கள் கோரிக்கை வைத்த, கோட்டை மாரியம்மன் திருக்கோயில் 2014 ஆம் ஆண்டு குடமுழுக்கு திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட இந்த ஆட்சி வந்தபிறகுதான் இந்த இரண்டு ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 3 முறை அந்த திருக்கோயிலுக்கு ஆய்வு செய்தேன். வருகின்ற 27 ஆம் தேதி அன்று காலை நன்னீராட்டு விழாவும், மாலை திருத்தேர் பவனியும் நடைபெறயிருக்கின்றது. நிச்சயமாக அன்னைத் தமிழியில் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் திருக்கோயில்களின் வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக 1077 கோயில்களுக்கு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு குடமுழுக்கு நடைபெற்ற ஒரு ஆட்சி, தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



தேனி வடக்கு மாவட்டம் நகரச் செயலாளர், கவுன்சிலர், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டியன் ஏற்பட்டில் தேனி நகரப் பகுதிகளில் 33 வார்டுகளில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார். உடன் வடக்குமாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அஜிப்கான், பொதுக்குழு உறுப்பினர் முருகேசன், மாவட்டப் பிரதிநிதி பண்ணை ரவி பவுன், துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பரணீஸ்வரன், ஜெயக்குமார், செல்லத்துரை, நகர இளைஞரணி சதீஷ் குமார், நகர மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் சுகன்யா, இளைஞர் அணிஅரவிந்த் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலையில் ப.உ.ச. - இரா.தர்மலிங்கம் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, அக். 11- சனாதனத்தை எதிர்ப்பதில் எப்போதும் சமரசமில்லை என்று திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த முன்னாள் அமைச்சர் ப.உ.ச., மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகி யோர் நூற்றாண்டு விழாவில் உரையாற்றும்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

08.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருவண்ணாமலை தண்டராம்பட்டு சாலையில் உள்ள மாதவி பன்னீர்செல்வம் திருமண மஹாலில், திராவிட இயக்கம் வளர்த்திட்ட முன்னோடிகள் முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம், கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகியோர் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு. பிச்சாண்டி தலைமை வகித்தார். வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் முன்னிலை வகித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். காலை 9.00 மணிக்கு திருக்குவளை சகோதரிகள் கலைமாமணி, முனைவர் மு.சுந்தரி, முனைவர் மு.சௌத்திரி ஆகியோரின் மங்கல இசை நடைபெற்றது.

காலை 9.30 மணிக்கு ‘திசைகள் போற்றும் திராவிட மாவீரர்கள்’ என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமை வகித்தார். கவிஞர் சொற்கோ கருணாநிதி, கவிஞர் தஞ்சை இனியன், கவிஞர் சினேகா பார்த்திபராஜா ஆகியோர் கவிப்பாடினர்.

காலை 10.30 மணிக்கு ‘திராவிடத்திருவிழா’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. நகைச்சுவை பேரரசர் திருவாரூர் இர.சண்முகவடிவேல் தலைமை வகித்தார். பேராசிரியர் அன்பழகன், பேராசிரியர் நீலகண்டன் ஆகியோர் கருத்துரை வழங்கி உரைநிகழ்த்தினர்.

### அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

விழாவில் கலந்து கொண்டு நூற்றாண்டு விழாக்காணும் முன்னோடிகளின் குடும்பத்தினருக்கு நினைவுபரிசுகள் வழங்கியும், பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கியும் பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

### விழா கொண்டாடுவதற்கு காரணமானவர் முதல்வர் அவர்கள்!

கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடி வரும் இந்த நேரத்தில் அவரோடு சம காலத்தில் வாழ்ந்த திராவிட இயக்க முன்னோடிகளான மறைந்த ப.உ.சண்முகம், இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டும் என நடைபயிற்சி சென்று கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். அவரது ஆணையை ஏற்று இங்கு இந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழா நடக்கக் காரணமான முதல்வருக்கு நன்றி கடன்பட்டிருக்கிறோம்.

தலைமை பண்புக்கு ப.உ.சண்முகமும், தொண்டர்களுக்கு தர்மலிங்கமும் இலக்கணமாக திகழ்ந்தனர். தலைவருக்கும் தொண்டனுக்கும் ஒருசேர நூற்றாண்டு விழா கொண்டாடும் பேரியக்கம் திமுக மட்டும்தான். சகோதர பாசத்துடன் செயல்படும் கட்சி இது. எனவே தான் தம்பி என அண்ணாவும், உடன்பிறப்பே என கலைஞரும் அழைத்தனர்.

### நான்காம் தலைமுறை தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சமுதாயம் முன்னேற்ற த்துக்கு கொண்டுசென்றது திராவிடர் கழகம், சமஸ்கிருதம் படித்தால்தான் மருத்துவ படிப்புக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற நிலையை மாற்றியது. நாம் படிக்க வேண்டும் என பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் போராடினர். பதவிக்காக உருவான இயக்கம் அல்ல தி.மு.க. இந்தி போராட்டத்துக்கு வித்திட்ட முதல் மாநாடு திருவண்ணாமலையில் தான் நடந்தது. தலைவர்களை அழைத்து வந்து துணிச்சலாக அந்த மாநாட்டை தனது அரிசி ஆலையில் நடத்தியவர் ப.உ.சண்முகம். பெரியார் அண்ணா, கலைஞர், வழியில் நான்காம் தலைமுறை தலைவராக முதல்வர் மு.க. ஸ்டாலின் நம்மையும், கழகத்தையும் வழிநடத்துகிறார்.

ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்த அமைச்சர் உதயநிதிஸ்டாலின், சனாதனத்தை அடித்து விரட்டுகிறார். எதற்காகவும் கொள்கையில் சமரசம் செய்ய மாட்டோம். ஆன்மிகமும் சனாதனமும் ஒன்றல்ல, இந்துவும், இந்துத்வாவும் ஒன்றல்ல. ஆன்மிகம் அனைவரையும் நேசிப்பது. ஆனால் பிறரை அடிமைப்படுத்துவதும், தனக்கு கீழானவன் என்பதும், பாகுபாடு பார்ப்பதும் சனாதனம். அண்ணாமலையார் கோவிலுக்கு பல கோடி மதிப்பில் திட்டங்களை செயல்படுத்துகிறார். ஆன்மிகத்தை நேசிக்கிற, உதவுகிற, தேவைகளை பூர்த்தி செய்கிற ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி.

### தி.மு.க. சனாதனத்தை எப்போதும் ஏற்காது!

அதே நேரத்தில், எந்த காலத்திலும் தி.மு.க. சனாதனத்தை ஏற்காது. கடவுளுக்கு எதிரானவர் அல்ல, பெரியார் கடவுளின் பெயரால் உள்ள அடிமைத்தனத்தை தான் அவர் எதிர்த்தார்.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு பேசினார்.

விழாவில் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்களின் மருமகன் ப.கண்ணன், இரா. தர்மலிங்கம் அவர்களின் மருமகள் கல்பனா சம்பத் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். நிறைவாக நகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் நன்றி கூறினார்.

விழாவுக்கான ஏற்பாடுகளை மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா விஜயரங்கன், தொழிலதிபர் எம்.இ. ஜமாலுதீன், முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர் வி.தனுசு, எக்ஸ்னோரா ப.இந்திர ராஜன், வர்த்தகர் சங்க தாலுகா தலைவர் எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

# கட்சிப் பாகுபாடு பார்க்காமல் திட்டப்பணிகளைச் செயல்படுத்துகிறார்!

## பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, அக். 11 - தமிழ்நாடு சட்டப்பேரவையில் ம.தி.மு.க. உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் உயர்மட்டப் பாலம் தொடர்பாக நன்றி தெரிவித்து பேசியபோது, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கட்சி பாகுபாடு பார்க்காமல் அவரவர் தொகுதிகளில் திட்டப்பணிகளை அறிவிக்கிறார் என்று குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது :-

**அமைச்சர் எ.வ.வேலு:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். முதன்முதலாக பொறுப்பேற்ற இந்த திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டிலுள்ள தரைமட்டப் பாலங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக உயர்மட்டப் பாலங்களாக மாற்ற வேண்டுமென்று கணக்கில் எடுத்துக்கொண்டு, அப்பணிகள் இந்த 5 ஆண்டுக்காலங்களில் முடிக்கப்பட வேண்டுமென்று ஒன்றன்பின் ஒன்றாக பாலங்கள் அனைத்தும் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், சாத்தூர் தொகுதியை எடுத்துக்கொண்டோமேயானால், 53 பாலங்கள் அந்தத் தொகுதியில் மட்டும் இருக்கின்றன. அவற்றில், தற்போது 18 பாலங்கள் நிறைவு பெற்றுவிட்டன. 3 பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கின்ற பணிகள் 9 பாலங்களுக்கு நடைபெறுகின்றன. நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் மூலமாக 2 பாலப் பணிகள் நடைபெற்று வருகினற்ன.

கடந்த 2 ஆண்டுக்காலத்தில், அந்த ஒரு தொகுதியில் மட்டும் மொத்தம் 32 பாலப் பணிகள் நடைபெறுகின்றன. எஞ்சியுள்ள 21 பாலப் பணிகள் அடுத்த இரண்டாண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும். உறுப்பினர் அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஆவார். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் கட்சி, அந்தக் கட்சி, இவர்கள், அவர்கள் என்றெல்லாம் பாகுபாடு பார்க்காமல் 234 தொகுதிகளிலும் அனைத்துப் பணிகளும் நடைபெற வேண்டும் எண்ணம்தான் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், ஓர் உதாரணத்திற்காகத் தான் இந்தத் தொகுதியைச் சொல்லியிருக்கிறேன். இப்படித்தான் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தொகுதிகளிலும், எந்தவித பாகுபாடும் இல்லாமல், உயர்மட்டப் பாலப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

## ரூ.18 லட்சம் மதிப்பில் –

# நாட்டரசன் கோட்டை பேரூராட்சியில் குளியலறை - கழிவறை!

## பேரூராட்சித் தலைவர் பிரியதர்ஷினி திறந்து வைத்தார்!

சிவகங்கை, அக். 11 - சிவகங்கை அருகே நாட்டரசன்கோட்டை பேரூராட்சியில் குளியலறை மற்றும் கழிவறையுடன் கூடிய சமுதாய கழிப்பிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நடந்தது.

ரூ.18லட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 8அறைகளுடன் பெண்கள் பயன்படுத்தும் வகையில் இக்கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. நிகழ்ச்சிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமுருகன் தலைமை வகித்தார். பேரூராட்சி தலைவர் பிரியதர்ஷினி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர் திமுக கவிராஜ், கவுன்சிலர் மன்சூர்அலி, துப்புரவு மேற்பார்வையாளர் தென்னவன், அலுவலக பணியாளர்கள் சண்முகப்ரியா, ஜெயலட்சுமி, வெண்மதி மற்றும் 8வது வார்டு பொது மக்கள் கலநது கொண்டனர்.



சிவகங்கை அருகே நாட்டரசன்கோட்டை பேரூராட்சியில் சமுதாய கழிப்பிட கட்டிடத்தை பேரூராட்சி தலைவர் பிரியதர்ஷினி திறந்து வைத்தார்.

# மதச்சார்பற்ற இந்தியாவில் ஓர் இந்துத்துவா பிரதமர்?....

கவிஞர் தமிழ்தாசன்,
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்



"...**கோ**விலில் குழப்பம் விளைவித்தேன்; கோவில் கூடாது என்பதற்காக அல்ல; கோவில் கொடியவர்களின் கூடாரம் ஆகி விடக் கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன்; அவன் பக்தன் என்பதற்காக அல்ல; பக்தி பகல் வேஷமாய் ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக......" இப்படி சமூகத்தின் அவலத்தை உரையாடலாக எழுதியிருப்பார் "பராசக்தி" எனும் திரைப்படத்தில் தலைவர் கலைஞர் அவர்கள்.

நாடு முழுவதும் மத மோதல்களை உருவாக்குவதற்கு வெறுப்புணர்வுப் பேச்சுகளாலும், கொலைவெறிச் செயல்பாடு களாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளாலும் பா.ஜ.க. தலைவர்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களும் ஈடுபட்டு வருகிறார்கள். மோடி தலைமையில் சட்டத்திற்கு எதிராக மக்களைப் பிளவுப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு ஆர். எஸ்.எஸ். அமைப்பின் கடமையை நிறைவேற்றி வருகிறார்கள்.

"தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களை தி.மு.க அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோயில் சொத்துக்கள் மற்றும் அதன் வருமானங்களை முறைகேடாக அரசு பயன்படுத்தி வருகிறது" என்று தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் பகிரங்கமாகப் பிரதமர் மோடி குற்றம் சுமத்திப் பேசியுள்ளார். இதற்குச் சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற வள்ளலார் 200 ஓராண்டு தொடர் நிகழ்வின் நிறைவு விழாவில், தமிழ்நாடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தகுந்த பதில் அளித்துள்ளார். அறநிலையத்துறையில் என்னென்ன சாதனைகள் செய்து வருகிறது என்பதனைப் பட்டியலிட்டும், ஆக்கிரமிப்புச் சொத்துக்களை மீட்டு என்னென்ன அறப்பணிகள் அரசு செய்து வருகிறது என்பது குறித்தும் அப்பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

இந்துக் கோயில்களுக்கு அறநிலையத்துறை இருப்பது போல, இஸ்லாமிய பள்ளிவாசல் மற்றும் தர்க்காக்களுக்கு நிர்வாகம் செய்ய வக்பு வாரியம் என்ற அரசுத்துறை இருப்பது பிரதமர் மோடிக்குத் தெரியாதா? அவருடைய தலைமையில் ஒன்றிய அமைச்சரவையில் வக்பு வாரிய தலைவராக ஸ்மிருதி இரானி அமைச்சராக இருப்பது நினைவுக்கு வரவில்லையா?

அத்துடன் "தமிழக அரசின் பிடியில் கோயில்கள் சுரண்டப்படுகின்றன; அரசின் பிடியிலிருந்து அக் கோயில்களை மீட்போம்" என்று நடை பயணம் எனும் பெயரால் பஸ் பயணம் செய்து வரும் பா.ஜ.க அண்ணாமலைகள் எக்ஸ் தளத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்.

அயோத்தி இராமர் கோயில் கட்டும் இடத்தில், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு இடத்தை அறக்கட்டளைக்கு ரூ. 18.5 கோடி கொடுத்து வாங்கியவர்கள். ஆனால், அந்தச் சொத்து அதற்கு முன்னர் ரூ. 2 கோடிக்கு வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தைக் கோயில் எனும் பேரில் வாங்கிய சங்பரிவார அமைப்பினர் ரூ. 18.5 கோடிக்கு வாங்கிக் கொள்ளையடித் திருக்கிறார்கள் என்றால், அந்த மோசடித் தனத்தை என்ன என்று மோடியும் அவர் கூட்டமும் சொல்லத் தயாரா'?

இந்துத்துவாக் கொள்கை வெறியில் ஆடுகின்ற மோடி, ஆர்.எஸ்,எஸ். னுடைய ஊது குழல் கருவியாக இருந்து அடிக்கடிப் பேசி வருகிறார். சிதம்பரம் கோவில்களில் தீட்சிதர்கள் செய்யும் வசூல் மோசடியைப் பேச மறந்துவிட்டார்? கோவையில் பல அரசு ஏக்கர் நிலத்தைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து ஆதியோகி சிலை நிறுவிய ஜக்கி வாசுதேவன் அழைப்பில் அதன் திறப்பு விழாவிற்கு மோடியே வந்து கலந்து சென்றதை மறந்து விட்டாரா? யமுனை நதித் தீரத்தில் சிவசங்கர் பாபாவுக்கு விழா நடத்த அனுமதி கொடுத்த மோடி,, விழா என்ற பெயரால் ஆட்டம்பாட்டம் நடத்திப் பல ஏக்கர் அரசு நிலத்தைப் பாழ்படுத்திச் சுற்றுச்சூழல் மாசை ஏற்படுத்தியதோடு, பழமையான மரபு சார்ந்த உயிரிகள் அழியவும்,அரசுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியும், நதியைக் கெடுத்த நபருக்குப் பசுமைத் தீர்ப்பாயம் மற்றும் நீதிமன்றம் பல நூறு கோடி ரூபாய் அபராதம் விதித்ததை மறந்து விட்டாரா? இப்படிச் சிதம்பரம் நடராஜர் கோயில், கோவை ஆதியோகி கோயில், மேல்மருவத்தூர்ஆதி பராசக்தி கோயில் என்பன போன்றவை அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா?

அரசியலமைப்பு சட்டத்தின்படி உறுதிமொழி எடுத்துக் கொண்ட பிரதமர் மோடி இந்துத்துவாக் கொள்கையைத் தூக்கிப் பிடித்து வருகிறார். பாபர் மசூதியை இடிக்கக் காரணமான மதவாதிகளான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி போன்றோரின் பா.ஜ.க. வாரிசே மோடி. இந்திய நாட்டின் பிரதமராக இருப்பவர் சமயச் சார்பின்மையைக் கடைப்பிடிப்பவராகச் செயல்பட வேண்டும். ஆனால், அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்குச் சென்று அடிக்கல் நாட்டுத் திருவிழாவில் கலந்து கொண்டவர்தான் மோடி. அதே நேரத்தில் மசூதி கட்டுவதற்கோ, கிறிஸ்துவ ஆலயம், சீக்கியக் கோயில் கட்டுவதற்குச் செங்கல் ஒன்றாவது எடுத்து வைக்க முன் வந்தது இல்லை.

நீதிக்கட்சிக் காலத்தில், பனகல் அரசரின் மந்திரி சபைக்குப் பேரும், புகழையும் அள்ளித் தந்த சட்டந்தான் இந்து அறநிலைய பாதுகாப்புத் துறை உருவாக்கும் சட்டம் என்பதாகும். இதற்கு முன்னர், கடந்த பல்வேறு மன்னர்கள் காலத்தில், கோயிலுக்குத் தானமாகவும் மானியங்களாகவும் ஒதுக்கப்பட்ட பல லட்சக்கணக் கான மதிப்புள்ள ஏக்கர் நிலங்கள், பல்வேறு தனிநபர்களின் ஊழல், கொள்ளை ஆக்ரமிப்புக்கு ஆளாகியதோடு,, உரிய வருமானமின்றி அவதிப்படக்கூடிய துயர நிலை ஏற்பட்டது. அத்துடன், கோவில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?அவை யாரிடம் உள்ளன? என்று கணக்குகள் கூடப் பார்த்துப் பராமரிக்க முடியவில்லை. கோயில்கள் அனைத்தும் பூஜை செய்யக்கூடிய பிராமணர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததாலும், தர்மகர்த்தாக்கள் பேரளவுக்குத்தான் இருந்தனர் என்பதாலும், ஊழல் முறைகேடுகள் கட்டுப்படுத்த முடியவில்லை.

தனது சாதியின் குல உயர்வைக் காட்டிக் கடவுளின் கருவறை யில் சென்று பூஜை செய்யும் உரிமை பெற்றிருந்த பிராமணர்கள்; கோயில் முழு நிர்வாகத்தையும் தங்களது மனுதர்மக் கட்டுப் பாட்டில் வைத்திருந்தனர் என்பதால், கோயில் தர்மகர்த்தாக் களுக்குத் தெரியாமலேயே பிராமணர்கள் கோவிலின் வருவாயை முறைகேடாகப் பயன்படுத்தி வந்தனர். பல இடங்களில் தர்ம கர்த்தாக்களின் துணையோடு, வருவாயைத் தவறாகவே பயன்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தன , மேலும், மடங்கள், அறக்கட்டளைகள் போன்றவைகளை உருவாக்கப்பட்ட காலத்திலும் கூட, நல்ல நோக்கத்தோடு ஏராளமான சொத்துக்களோடு உருவாக்கப்பட்டும், அவை காலப்போக்கில் கபடம், சூது நிறைந்த நிர்வாக மதியினரால் முறைகேடுகள் பெரிதும் மலியத் தொடங்கிச் செயல்பட்டு வந்தன.

இப்படியான காரணங்களால் எந்த நோக்கங்களுக்காக மடங்களும், அறக்கட்டளைகளும் உருவாக்கப்பட்டனவோ, அந்த நல்ல நோக்கங்கள் சரியாக நிறைவேறாமல் தடைப்பட்டன. அவற்றின் சொத்துக்களும் சீரழிந்து, சுரண்டப்பட வாய்ப்புகள் உண்டாயின. இப்படிப்பட்ட தவறுகளை, ஊழல்களை பிராமணர்கள் மட்டுமின்றி, அவர்களோடு பிராமணர்கள் அல்லாதவர்களும் கூட ஈடுபட்டுச் செய்து வந்தார்கள்.

இது போன்ற கோயில்களில் நடக்கும் தவறுகளைச் சரி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஆங்கில அரசுக்கு இருந்த போதும், 1857இல் சிப்பாய் கலகம் ஏற்பட்ட அனுபவம் காரணமாக, ஆங்கிலேயர் அனுபவித்த துன்பங்கள் இதில் ஈடுபட விடாமல் தடுத்து வந்தன. ஒரு வேளை சரி செய்ய சட்டம் ஆங்கிலேயர் இயற்றியிருந்தால், மதத்தில் "தலையீடு" எனும் குரலை இந்து மதவாதச் சக்திகள் கிளப்பி, இந்திய மக்களிடத்தில் மத உணர்வுகளை பயன்படுத்தி தவறான அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை ஏற்படுத்த வாய்ப்பு அளித்திருக்க கூடும். இதனால் ஆங்கிலேயர்கள் தயங்கினர் .ஆனால், நீதிக்கட்சிக் காலத்தில், பனகல் அரசர் இராமராய நிங்கார் இப்படி ஒரு சட்டம் 1922 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி அறிமுகப் படுத்தப்பட்ட இந்து அறநிலைய மசோதா (Hindu Religious Endowment bill) பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தின் மூலம் சென்னை இராஜஸ்தானியில் இருந்த இந்து கோயில்கள், அரசின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த போது, ஆங்கில அரசு அதனை வெகுவாகப் பாராட்டியது. இருந்த போதும் " வழிபாட்டுக்குரிய கோவில்களை அரசின் துறையாகக் கூடாது"... "ஆண்டவனைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை.." "மத விஷயங்களில் அரசு தலையிடக்கூடாது..." என்ற எதிர் முழக்கங்கள் எழவும் தொடங்கின. அத்துடன் பனகல் அரசருக்கு நெருக்கமான பல நண்பர்களும், உறவுகளும் இந்த முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

மேலும் வசதிக்காரர்கள், செல்வாக்கு மிக்க ஆரியப் பிராமணர்கள், அவர்களின் அலுவலர்கள் வழக்கறிஞர்கள் எனத் தூண்டி விடப்பட்டு ஆங்கிலேய உயர் அதிகாரிகளைச் சரி கட்டுவதற்கும் ,இந்தச் சட்டம் எந்த விதத்திலும் வைஸ்ராயின் ஒப்புதலைப் பெற்று விடாமல் செய்வதற்கும் முயற்சிகள் செய்து வந்தனர் .சொர்க்கமாக அனுபவித்து ,சொகுசாக உண்டு கொழுத்து, உறங்கி வந்த மடப் பொறுப்பிலிருந்த பிராமணர்கள் அல்லாதவர்கள் கூட, இந்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வந்தனர் .தமிழ்நாடு முழுவதும் ஆரியப் பார்ப்பனர்களும் மடச் சொத்துக்களைக் கபளி கர ஆக்கிரமிப்புச் செய்து வந்தவர்களும் எதிர்ப்பு தெரிவித்துப் போர்ப்பரணி பாடி நின்றனர். பிராமணர்கள் தங்களுக்கு வேண்டிய பத்திரிகைகள் மூலம் மிகப் பெரிய அநீதி நடைபெற்றதாகக் கூறி எழுத வைத்தனர். பிராமண அல்லாதவருக்கு எதிராகச் செயல்பட்ட அனைத்துச் சக்திகளும் ஒன்றாக இணைந்து வைசிராய் ஒப்புதல் இந்தச் சட்டத்திற்கு வழங்கக் கூடாது என்று கடும் நெருக்கடி கொடுத்து வந்தன.

எனினும், பனகல் அரசர் தனது உறுதியைக் கை விடவில்லை. இந்தச் சட்டத்தின் மீது தனிக் கவனத்தைச் செலுத்தி அக்கறை காட்டி வந்தார். ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பிறகு, வைஸ்ராயின் ஒப்புதல் பெறச் சட்டத்தை எடுத்துக்கொண்டு தாமே டெல்லிக்குச் சென்றார். வைஸ்ராய் இர்வின் பிரபு, சட்டம் உறுப்பினர் எஸ். ஆர்.தாஸ் ஆகிய இருவரையும் நேரில் சந்தித்து இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரண நோக்கத்தை விளக்கி ஒப்புதல் பெற்றுத் திரும்பினார் என்பது வரலாறு. தென்னாடு முழுமைக்கும் ஏன் இந்தியாவுக்கே வழிகாட்டியாக முன்னோடியாக இந்தச் சட்டம் அமைந்து சமூக சமய சீரமைப்புக்கு உதவியது என்றால், அது நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் என்ற மாபெரும் சமூக சீர்திருத்தவாதியைச் சேரும் எனலாம்.

எனவே, திடீரென்று பொத்தாம் பொதுவாகத் திடீரென்று எந்த விதத்திலும் சட்டம் கொண்டுவந்து விடவில்லை. கொள்ளைகளை, கபளிகரங்களை, ஆக்கிர மிப்புகளை தடுக்க அறநிலை யத்துறை சார்ந்த கோயில்கள், சொத்துக்கள் ஒழுங்குப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த நீண்ட நெடிய வரலாறு உண்டு.

கோவில்களையும், கோவில் சொத்து, அதன் நிலங்களையும் நிர்வாகம் செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒரு பெரிய வரலாறு உள்ளது.1817 ஆம் ஆண்டு மதராசு நிலக் கொடை கள் மற்றும் வாரிசில்லா தவர் அரசு பொருட்கள் ஒழுங் குறுத்தும் சட்டம், உருவாக்கித் திருக்கோயில் நிதி அரசுக் கொடைகள், மக்கள் நலன்கள் ஆய்வு செய்யப்பட் டன.1849 ஆம் ஆண்டு (Board of Revenue) வருவாய் வாரி யத்திடம் கண்காணிக்க ஒப்படைக்கப்பட்டது. 21ஜில்லாக்களில் 8,828 கோயில்கள் அரசு நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் ஊழல் செய்த தர்மகர்த்தாக்கள் பணி நீக்கப்பட்டன. மூடப்பட்ட கோவில்கள் எல்லாம் திறக்கப்பட்டன.1858 ஆம் ஆண்டு இந்திய நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனி இருந்து பிரிட்டிஷ் மகாராணி யாரிடம் நேரடியாக வந்தது. வெளியில் இருந்தே கோயில் நிர்வாகம் கண்காணிக்கப்பட்டது.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம். 1916 இல் பிராமணரல்லாத அமைப்பு, தென்னிந்திய நல உரிமைச் சங்கம், 1920 இல் நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி பனகல் அரசரால் 1922 டிசம்பர் 18 சென்னை மாகாணத்திலிருந்த அனைத்துக் திருக்கோயில்களும் அரசின் பரிபாலனம் செய்யச் சட்டம், 1927 இல் இந்து சமய அறநிலைய வாரியம் ஏற்படுத்தப் பட்டது. 1947 - 1949 இல் ஓமந்தூரார் இராமசாமி முதல்வராக இருந்தபோது, எண்ணற்ற முறைகேடுகள் களைய நடவடிக்கை, 1950 இல் சட்ட ஆணையம் மூலம் கோவில்களைப் பராமரிக்கத் தனிச்சட்டம், 1951இல் மெட்ராஸ் இந்து சமய மற்றும் அறக்கொடை கள் சட்டம்,1954 இல் காமராஜர் முதல்வராக இருந்த போது, அவரது அமைச்சரவையில் ரெட்டைமலை சீனிவாசனின் பேரன் பரமேஸ்வரன் அமைச்சராக இடம் பெற்று, இந்து அறநிலையத் துறை ஒழுங்குப்படுத்தும் சட்டம் குறைகள் களைய நடவடிக்கை எடுக்கப்பட இயற்றப்பட்டது. 22/1959 தமிழ்நாடு அறநிலை யத்துறைச் சட்டம், சர்.சி.வி. இராமசாமி ஐயர் ஆணையம் குழு பரிந்துரைகள் இந்துச் சமய அறநிலையத் துறை நிர்வகிக்கத் தனிச் சட்டம் உருவாக்க பரிந்துரை.

முதல்வராயிருந்த கலைஞர் காலத்தில் உருவாக்கப்பட்ட அறநிலையத்துறை சீர்திருத்தச் சட்டங்கள், 1970 ஆம் ஆண்டு ஆலயங்களில் அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம், தொடர்ந்து தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காலத்தில் 2021ஆம் ஆண்டு சட்டம் , இப்படி அறநிலையத்துறையில் சீர்திருத்த சட்டங்கள் தொடர்கின்றன. ஆனால், பிரதமர் மோடியும், ஆர். எஸ்.எஸ். சங்க் பரிவார் அமைப்புகளும், தென்னகத்தில் கோயில் களை தி.மு.க . அரசு கைப்பற்றிக் கொண்டது என்று தவறான, சட்ட விரோதமான வீண் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அவதூறு பேச்சுக்கள் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆனால், பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற சங்பரிவார அமைப்புகள், இந்துக் கோயில் களையும், அதன் நிர்வாகத்தையும் இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கொள்ளையர் முகமூடி போட்டுக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழர்களுக்கே உரிய கோயில் களை அதன் சொத்துக்களைச் சுரண்டவும், கொள்ளை அடிக்க வும், பக்தியின் பெயரால் ஒப்படைக்க வேண்டும் என்பது அவர்களது நீண்ட காலக் கோரிக்கை. சமூக நீதிக்காக தொடங்கப் பட்ட திராவிடர் இயக்கம், அரசியல் இயக்கமான தி.மு.க. ஆட்சியில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் வழி நின்று, தளபதி அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகத்தை நடத்தி வருகிறார். அவரது அமைச்சர வையில் இடம்பெற்ற அமைச்சர் சேகர் பாபு, அறநிலையத்துறை யில் ஆக்கிரமிப்பு செய்த பல்வேறு நிலங்களை மீட்பதோடு பல்வேறு சாதனைகளை மக்களுக்குச் செய்து வருகிறார்.

அண்மையில் 'தீக்கதிர்' ஏட்டில் கா. கனகராஜ் சி.பி..ஐ (எம்) என்பவர் எழுதி வெளியிட்ட செய்தியில் கூட சங்பரிவார் அமைப்பு கள் சேர்ந்த ஆக்கிரமிப்பாளர் பட்டியல் வந்திருந்தது. திருவண்ணா மலை நகர் அம்மன் அம்மாள் மடம் ரூ.30 கோடி மதிப்புச் சொத்து பி.எல்.சங்கர் (பா.ஜ.க), காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் திருக்கோயில் இடத்தைச் சூரிய நாராயணன் (பா.ஜ.க), காஞ்சிபுரம் அதே கோயிலைச் சேர்ந்த ரூ. 1.5 கோடி சொத்தை ஸ்ரீகண்டன் (இந்து மகாசபை) கன்னியாகுமரி கோதேஸ்வரம் பத்திரகாளி அம்மன் திருக்கோயில் இடம் ரூ.5 லட்சம் மதிப்பு இடம் (சேவா பாரதி,), கன்னியாகுமரி வெள்ளிமலை பாலசுப்பிரமணியசாமி கோயில் இடம் ரூ 10 கோடி மதிப்பு) ஆலயம் முன்னேற்ற சங்கம்); கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயில் இடம் வேதாந்தம் (விஷ்வ இந்து பரிசத்),சென்னை முத்துக்குமாரசாமி கோவில் இடம் ரூ.10 கோடி மதிப்பு, ஆறுமுகம் (பா.ஜ.க.,) தஞ்சாவூர் பந்த நல்லூர் பசுபதீஸ்வரர் சுவாமி கோயில் இடம் ரூ. 21.63 இலட்சம் மதிப்பு இராதா (பா.ஜ.க,), கடலூர் பண்ருட்டி நகர் குரு இலட்சுமி அம்மாள் அறக்கட்டளை சொந்தமான இடம் ரூ. 100 கோடி இராமச்சந்திரன் (பா.ஜ.க,,) ஆகியோர் ஆக்கரமித்துக் கொள்ளையடித்துள்ளனர். இப்படியான பட்டியலைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இப்படி ஆக்கிரமிப்பு செய்த கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்பதைப் பிரதமர் மோடியும், சங்பரிவார் அமைப்புகளும் அறிந்து கொள்ளட்டும்.

ஆனால், மோடியும் ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவார் அமைப்பு களும், தென்னகத்தில் கோயில்களை தி.மு.க. அரசு கைப்பற்றிக் கொண்டது என்று தவறான சட்ட விரோதமான வீண் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அவதூறு பேச்சுகள் கண்டிக்கத்தக்கதாகும்.

---

கழக மகளிர் அணி முன்னெடுக்கும் மகளிர் உரிமை மாநாட்டில்

## கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர், அக். 11 -

தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழக மகளிர் அணியினர் எடுக்கும் மகளிர் உரிமை மாநாடு விழாவில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக மகளிர் அணியினர் பெருந் திரளாக பங்கேற்க வேண் டும் என மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் கீழ் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி முன்னெடுக்கும் மகளிர் உரிமை மாநாடு 14.10.2023 சனிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறுகிறது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகிறார்.

மேலும் முன்னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் மகளிர் தலைவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

அதுசமயம், இந்த மாநாட்டில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்டக் கழக மகளிர் அணி நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக மகளிர் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு மகளிர் உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற மகளிர் பிரதிநிதிகள், நகர மன்ற, பேரூராட்சிமன்ற, ஊராட்சிமன்ற மகளிர் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு மகளிர் உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம்!

சென்னை, அக். 11 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி பாக நிலை முகவர்கள் கூட்டம் 8.10.2023 அன்று காலை 11 மணியளவில் ஓட்டேரி ஸ்ட்ரான்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி. மகாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு நாடாளுமன்றத் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்கி சிறப் புரையாற்றினார்.

திரு.வி.க. நகர் வடக்கு பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலை யில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, மருத்துவர் யாழினி, இசட். ஆசாத்,புனிதவதி எத்திராசன், பாகநிலை முகவர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

---

ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர்

## சோமு. மதியழகன் மறைவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 11 –

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றிய முன்னாள் செயலாளரும் முன்னாள் பெருந்தலைவருமான சோம சுந்தரம் அவர்களின் புதல்வரும், ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் - ஆலத்தூர் மேற்கு மாவட்டக் கவுன்சிலருமான சோமு. மதியழகன் (வயது 65) அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் (9.10.2023) இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

---

ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் -

## மாவட்டக் கவுன்சிலர் சோமு.மதியழகன் மறைவு!

### ஆ.ராசா எம்.பி.- அமைச்சர் சா.சி.சிவசங்கர் - குன்னம் ராஜேந்திரன் அஞ்சலி!



பெரம்பலூர், அக்.11 -

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும் - மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன் (63), சென்னை தனியார் மருத்துவமனையில், நேற்று முன்தினம் (09.10.2023, திங்கட்கிழமை) பிற்பகல் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சோமு. மதியழகன் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (10.10.2023) பிற்பகல் 2 மணிக்கு அவரது சொந்த ஊரான பாடாலூர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

---

எங்கள் முகவரிக்கு

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 24.05.1975

மறைவு 11.10.2018

சி.சி.கதிரவன்
DHMCT., MTM

என்றும் நினைவில்...

அம்மா சி.சின்னம்மாள் சின்னச்சாமி Ex.MC
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்

மனைவி, மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார் - உறவினர்கள்
மற்றும்
நியூ கதிரவன் பேக்கரி - நியூ கதிரவன் ரிலாக்ஸ் கார்னர்
நியூ கதிரவன் பஸ் சர்வீஸ் - நியூ கதிரவன் விவசாய பண்ணை
ஊழியர்கள் - ஆரப்பாளையம், மதுரை

M.R.கிராபிக்ஸ் 99655 67373

## அக்.10 – நினைவு நாள்:

# நெஞ்சிலே நீளுவார்! மு.வ. என்றும் நினைவிலே வாழுவார்!



**பேராசிரியர் மா.செல்வராசன்**

மு.வ. எனும் ஈரெழுத்தால்
மொழிகின்ற
ஓர்அறிஞர்!
தவமிருந்து பெற்ற ஒரு
தமிழ்ப்பே ராசிரியர்;
குவலயம் இன்றுவரை
கொண்டாடும் படைப்பாளர்;
எவரிடமும் இல்லாத
எளிமையும் தெளிவுமே
இவரிடம் இமயமாய்
இலகிடும் இயல்பினர்!
உவந்திட எழுதாமல்
உணர்ந்திட எழுதியவர்;
உவர்த்திடும் என்றாலும்
உண்மையை வடித்தவர்;
தவறான வழிநாடும்
தமிழ்இளைஞர் தடுத்தாள
நுவன்றபல கருத்துகள்
நோய்தீர்க்கும் மருந்துகள்!
கவலையுறும் மாந்தர்க்குக்
காட்டிடும் நல்வழிகள்!
துவளாத வாழ்க்கையெனும்
தோணிக்குத் துடுப்புகள்!

இவர்போல எதையுமே
தெளிவாக எண்ணுபவர்,
இவர்போல எப்பொருளும்
எளிமையாய் எழுதுபவர்,
இவர்போல நல்லதமிழ்
இயல்பாகப் பொழிபவர்,
இவர்போல வாழ்க்கையை
எடுத்தாய்ந்து படைப்பவர்
எவர்உள்ளார் இங்கென
ஏற்றிட இலகுபவர்
உவந்துரைக்க நல்லவர்
ஒருவரவர் மு.வ. தாம்!

சின்னதொரு வேலமெனும்
சிற்றூரில் பிறந்தவர்;
என்றாலும் படிப்பிலே
எப்போதும் சிறந்தவர்;
நின்றாலும் பள்ளியுடன்
நித்திரை மறந்தவர்;
வென்றேற வேண்டுமென
விழுப்பமாய் விரைந்தவர்;
குன்றேறும் உள்ளம்போல்
குறிக்கோள்தான் நிறைந்தவர்!
முன்னேறி வந்தவர்
மு.வ. எனல் மிகையன்று;
முன்னேற விழைவோர்க்கு
மு.வ. பெருந் தகையின்று!

கல்லூரி சேர்ந்தன்று
கல்வியைத் தொடர்வதற்கு
இல்லையே வசதியென
ஏங்காமல் தனியாக
இல்லத்தில் இருந்தபடி
இலக்குடன் படித்தவர்;
நல்லதமிழ்ப் புலவரெனும்
நற்பட்டத் தேர்வெழுதி
வெல்லவே முதன்மையாய்
விளங்கியவர்; வியந்துமிகப்
பல்லோரும் பாராட்டப்
பரிசாக ஆயிரம்
வெள்ளிகள் பெற்றவர்;
வெகுமதியாய் அவர்ஒரு
பள்ளியில் ஆசிரியர்
பணியினை உற்றவர்!
உள்ளந்தான் பெரிதெண்ண
உயர்பட்டம் பலபெற்றார்!
வெள்ளந்தான் பாய்வதுபோல்
விரைவாக மிகவுயர்ந்தார்!

பச்சையப்பன் கல்லூரி
பார்புகழ் பெற்றிடக்
கச்சிநகர் அண்ணா
கற்றதொரு காரணம்;
முச்சங்கத் தமிழ்தந்த
மு.வ. ஒரு காரணம்!
அச்சமயம் அவர்எழுதி
அளித்தபல அருநூல்கள்
எச்சமயம் ஆனாலும்
ஏற்றிடும் செங்கோல்கள்!

கல்லூரி ,பல்கலைக்
கழகமென உயர்ந்தவர்
நல்ல ஒரு துணைவேந்தர்
நன்னிலையில் சிறந்தவர்!
சொல்ல ஒரு
சான்றாவார்;
சுடர்மிகும் விளக்காவார்;
வெல்லவே வாழ்க்கையில்
விளங்கிடும் திசையாவார்!

புலவரிடம் இருந்ததமிழ்
பொதுமக்கள் தமிழாக
உலவிட நாடெங்கும்
உருவான எழுச்சியில்
அலகிலாப் பேரறிஞர்
அண்ணாவின் அழகுதமிழ்
சலசல எனப்பாயும்
தண்ணருவி ஆகவே
வலம்வரத் திராவிட
வரிசையில் எழுத்தாளர்
பலருமே உருவாகிப்
படைத்தனர்! அச்சமயம்
புலவருள் ஒருவராய்ப்
பொலிவுற்ற மு.வ.வும்
இலகுதமிழ் என்பதெலாம்
எளியதமிழ் என்றெழுதி
உலகுபுகழ் பெற்றவர்;
ஓங்குநிலை உற்றவர்!
விலகியே பழங்கூட்டம்
விளங்குமா றெழுதுவதே
புலமையெனப் புகல்வதுபோல்
புரியுமாறு எழுதியவர்!

இலக்கியம் மொழியியல்
இலக்கணம் வாழ்வியல்
கலக்கிடும் அரசியல்
கடிதங்கள் நாடகம்
துலக்கிடும் வரலாறு
தொடர்ந்தெழும் ஆராய்ச்சி
புலமையின் நல்விளக்கம்;
புதினங்கள், சிறுகதைகள்
இலக்கியத்தின்
பலவகையும்
ஈடற இயற்றியவர்!

எண்பது நன்னூல்கள்
இலக்கியமாம், ஒவ்வொன்றும்
பண்பட்ட வாழ்க்கைக்குப்
பயன்படும் கருவூலமாம்!
எண்ணத்தில் உயர்வெழ
ஏற்றசெயல் வெற்றிபெறக்
கண்மயங்கி நில்லாமல்
கருத்தின்றிச் செல்லாமல்
உண்மயக்கம் கொள்ளாமல்
உள்ளந்தான் எப்போதும்
திண்மையாய்க் கலக்கமின்றித்
தெளிவாகத் திகழ்தலுடன்
உண்மையாய்
ஒழுக்கமாய்
உரிமையாய் ஒழுகுவதே
வண்மைதரும்
உயர்வுமிகும்
வாழ்வுயரும் என்றவர்!

பதின்மூன்று புதினங்கள்
படைத்துப் பேர்
பெற்றவர்!
எதிலுமே வாழ்க்கையை
எடுத்தாய்ந்து புகன்றவர்;
விதியின்றி நடப்பதால்
வீணாகும் வாழ்வென்றும்
மதிகொண்டு காண்பதால்
மாண்பாகும்
நிலையென்றும்
அதிவேகம் எப்போதும்
அவலமே தருமென்றும்
புதிதாக வருவதைப்
போற்றலே தகுமென்றும்
இதுவரை சான்றோர்கள்
இயம்பியவை
ஏற்குமென்றும்
முதுமொழி வடித்தவர்;
மு.வ. எனும் படைப்பினர்!

அகல்விளக்குப் போல்புதினம்
ஆக்குதல் ஆகுமோ?
பகல்ஒளியாய் வாழ்க்கையைப்
படம்பிடித்தல் கூடுமோ?
இகலுறும் வாழ்க்கையில்
எதிர்ப்படும் இன்னல்கள்
தகர்த்திட வழிகாட்டும்
தக்கநல் புதினங்கள்
உகந்திடல் வாழ்க்கையில்
உயர்ந்திட வித்துகள்!

திருக்குறள் தெளிவுரை போல்
தீட்டுதற்கு யாருண்டு?
ஒருகோடி விற்றதொன்றே
உயர்வினைக் காட்டுமின்று!
திருவிக வழிநடந்து
திகழ்ந்தவர் மு.வ. எனும்
பெருந்தகை தமிழுக்குப்
பெருங்கொடை அல்லவோ?

இந்திமொழி ஊடுருவல்
இன்தமிழ்க்குத் தீமையெனும்
சிந்தனை கொண்டவர்;
செயலிலும்
நின்றவர்!
இந்திமொழித் திணிப்பெதிர்த்து
எழுந்தபெரும் போராட்டம்
அந்தநாள் இவருக்கோர்
அரும்பட்டம் பதுமஸ்ரீ
இந்திய அரசளிக்க
எதிர்ப்பாக மறுத்தவர்!
சிந்திய குருதியும்
தீக்குளித்துச் செத்ததும்
உந்தியே நின்றதால்
உள்ளந்தான் வெகுண்டவர்!

நல்லவராய்த் தமிழர்கள்
நானிலத்தில் இருந்தாலும்
வல்லவராய் விளங்குதலே
வாகைக்கு வழியென்று
சொல்லிய கருத்துகள்
துளிர்த்தெழும் குருத்துகள்!
எல்லோரும் போலின்றி
இனம்மொழி நாடுஇவை
இல்லாமல் தமிழருக்கு
ஏதிங்கே வாழ்வென்றார்!

அண்ணா கொண்டிருந்த
அளவற்ற பெருமதிப்பும்
கண்ணான கலைஞர்தாம்
காட்டிய பேரன்பும்
உண்மையாம்; இவருடைய
உயர்புலமை தமிழ்ப்புதுமை
வண்மையாம் கருத்தருமை
வழங்கலுக்கு உரியதாம்!

தமிழுக்குத் தொண்டுசெய்வோர்
சாவதில்லை என்றுரைத்தார்
தமி்ழ்ப்புரட்சிக் கவிஞரன்று;
சாற்றியது உண்மையென்றும்!
இமிழ்கடல்நீர் வான்வளிதீ
இருக்கின்ற வரையிலே
அமிழ்தான தமிழுக்கோர்
அருந்தொண்டு செய்பவர்
உமிழொளி கதிர்போல
உலகிலே நிலவுவர்!

நெஞ்சீர்க்கும்
பலநூல்கள்
நீர்மையாய்ப் படைத்த மு.வ.
நெஞ்சிலே நீளுவார்;
நினைவிலே வாழுவார்!



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன் (63), உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் மறைவெய்தினார். பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.



முதலமைச்சர் ஆணைக்கிணங்க, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், அரியலூர் மாவட்டம், வெற்றியூர் மதுரா, விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000க்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ்கான் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.

# நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

## பேரவையில் கு.பிச்சாண்டி கேள்வி!

சென்னை, அக்.11-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் (9.10.2023) பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும் என்று கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-



**கு.பிச்சாண்டி:** (பேரவைத் துணைத் தலைவர்): கீழ்ப் பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்படுத்தப்படும் நந்தன் கால்வாய்த்திட்டத்தை தென்பெண்ணைசெய்யாறு ஆகியவற்றை இணைத்து, நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டத்திற்கான கருத்துரு, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, 15 ஆண்டு காலமாகியிருக்கிறது. அத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் நந்தன் கால்வாயோடு இணைக்கின்ற திட்டம், எப்போது நிறைவேற்றப்படும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, சாத்தனூர் அணை போன்ற பல்வேறு அணைகளிலுள்ள பூங்காக்களை தனியார் பங்களிப்போடு, எம்.ஜி.எம். மற்றும் வி.ஜி.பி. போன்ற பொழுதுபோக்குப் பூங்காக்களைப் போல, அந்த அணைகளிலும் பூங்காக் களை ஏற்படுத்தி, அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் துரைமுருகன்:** பிச்சாண்டி குறிப்பிட்டுள்ள இத்திட்டம் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அறிவித்த திட்டமாகும். ஆனால், 63 திட்டங்களில் 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டம் மட்டும் தவறுதலாக 10 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் விட்டுப்போய்விட்டது.

இத்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் துறை மூலமாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். Dam இருக்கின்ற இடங்களில் பூங்காக்களை அமைப்பது, பராமரிப்பு செய்வது குறித்து, அப்பணிகளை அரசே எடுத்து செய்வதா அல்லது அவற்றை செய்யும் கம்பெனிகளுக்கு விடுவதா என்பது குறித்து அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, ஒன்று அரசே அப்பணிகளை மேற்கொள்ளும் அல்லது அப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய கம்பெனிகளுக்கு அந்தப் பணிகள் ஒப்படைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

## அரியலூர் தனியார் பட்டாசு ஆலையில் தீ விபத்தில்

# பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் நிதி உதவி!

## மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் - சி.வெ.கணேசன் சந்தித்து ஆறுதல்!

அரியலூர்,அக்.11-

அரியலூர் மாவட்டம், வெற்றியூர் மதுரா, விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (09.10.2023) நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டம், விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து, அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அறிவித்துள்ளார்கள்.

அதன்படி இவ்விபத்தில் காயமடைந்து அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபாண்டி (வயது 37), விக்னேஷ்வரன் (வயது 24), ஜெகன் (வயது 35), முத்துப்பாண்டி (வயது 33), ஆனந்தராஜன், சிவகாசியை சேர்ந்த ஏசுதாஸ் (வயது 60), அரியலூர் மாவட்டம், விரகாலூரைச் சேர்ந்த சத்தியமூர்த்தி (வயது 20) ஆகியோரை இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாய்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து, நிவாரண உதவித்தொகை காசோலைகளை வழங்கிய பின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அரியலூர் மாவட்டம், வெற்றியூர் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்த உடனேயே சட்டமன்றம் நடைபெற்று கொண்டிருக்கும் போது முதலமைச்சர் எங்களை அழைத்து உடனடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கும் ஆறுதல் தெரிவித்து, நிவாரண உதவித்தொகையை வழங்கிட வேண்டும் என எங்கள் இருவரையும் அனுப்பி வைத்துள்ளார்கள். மொத்தமாக இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் இங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று நலமாக உள்ளனர். அதிக பாதிப்பு உடையவர்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். அங்கு அவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களை காப்பாற்றுகின்ற முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விபத்தில் 10 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள் அவர்களுக்கு முதலமைச்சர் தலா மூன்று லட்சம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் தொழிலாக பாதுகாப்புத் துறையின் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு மேலும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை அதாவது முறையான பாதுகாப்பு நெறிமுறைகள் கடைபிடிக்காமல் இருக்குமேயானால் மீது கடுமையான நடவடிக்கை தமிழ்நாடு அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அதிகமான வெடி தொழிற்சாலைகள் விருதுநகர், சிவகாசி மாவட்டங்களில் உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் உள்ளது இதனை கண்காணிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட தீயணைப்பு அலுவலர், மாவட்ட தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் ஆகியோரைய உள்ளடக்கியதாகும்.

இந்த கண்காணிப்புக்குழு, இதுபோன்று தீபாவளி சமயங்களில் எல்லா இடங்களிலும் ஆய்வு செய்து நெறிமுறைகள் சரியாக கடைபிடித்தால் மட்டுமே அனுமதி வழங்குவார்கள். எங்கு நெறிமுறை கடைபிடிக்கப்படவில்லையோ அங்கு உரிமம் ரத்து செய்யப்படும். மேலும், தவறுகள் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. ஆகவே தற்போது எதிர்பாராத விதமாக விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக முறையான பாது காப்பு நெறிமுறைகளை கடைபிடிக்காத தொழிற்சாலைகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டும், விழிப்புணர்வு குறும்படங்கள் தொழிற்சாலையிலேயே தொழிலாளர்கள் பணிபுரியும் இடத்தில் விழிப்புணர்வு பெறும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும் இவ்விபத்து குறித்து ஆய்வு செய்து தவறுகள் இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார். தொடர்ந்து பிணவறையில் வைக்கப்பட்டிருந்த தீ விபத்தில் உயரிழந்தவர்களின் உடல்களை பார்வையிட்டு, உயிரிழந்தவர்களின் குடும்ப உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர், இவ்விபத்தில் படுகாயமடைந்து தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் அரியலூர் மாவட்டம், வெற்றியூரை சேர்ந்த கார்த்திக் (வயது 22), அரண்மனைக்குறிச்சியை சேர்ந்த முருகானந்தம் (வயது 20), தஞ்சாவூர் மாவட்டம், கண்டியூரை சேர்ந்த சுந்தர் (வயது 21) மற்றும் தீ விபத்து சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்டம், சடையாண்டி தோப்பினை சேர்ந்த பாஸ்டின் (வயது 42) ஆகியோரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள். மேலும், அரியலூர் மாவட்டம், மஞ்சமேடு கிராமத்தைச் சேர்ந்த கருப்பையன் (வயது 33), தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சேர்ந்த சந்துரு (வயது21), தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறை சேர்ந்த அனித்குமார் (வயது 27) ஆகியோரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்கள். பின்னர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சிறப்பு சிகிச்சைகளை வழங்கிட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களிடம் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் அறிவுறுத்தினார்கள். இந்நிகழ்வுகளில் அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ்கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாநகராட்சி துணை மேயர் திருமதி.அஞ்சுகம் பூபதி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு பிரதமர் மோடிக்கு உண்டா? இல்லையா?

# காவிரிப் பிரச்சினையில் பா.ஜ.க.வை பாதுகாக்கும் பழனிசாமி!

## சென்னை-அண்ணா அறிவாலயத்தில் அளித்த பேட்டியில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

**சென்னை, அக். 11-**

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை, காவிரி விவகாரம் குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், காவிரியிலிருந்து தண்ணீர் பெற்றுத் தரவேண்டிய பொறுப்பு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கே உள்ளது என்றும் காவிரி நதிநீர் விவகாரத்தில் பா.ஜ.க.வை பாதுகாக்கும் முயற்சியில் எடப்பாடி பழனிசாமி செயல்படுகிறார் என்றும் குற்றம்சாட்டினார்.**

**காவிரி நதிநீர் விவகாரத்தில் பா.ஜ.க.வைப் பாதுகாக்கும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி செயல்பட்டு வருவதாக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.**

சென்னை - அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் மாலை, சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டதாவது:-

“உச்சநீதிமன்ற தீர்ப்புபடி காவிரியில் இருந்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என தீர்மானத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனி சாமி பேசினார்.

## காவிரி விவகாரம் குறித்து – அடிப்படைப் புரிதல் கூட இல்லாமல் பேசுகிறார் எடப்பாடி!

காவிரி விவகாரம் பற்றியும் தீர்ப்பை நடைமுறைப்படுத்துதல் பற்றியும் அடிப்படை புரிதல் இல்லாமல் கர்நாடகாவை ஆளும் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டை வைக்க வேண்டும், ஒன்றியத்தில் பா.ஜ.க.வை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியிருக்கிறார்.

கணவனிடம் விவாகரத்து பெற்ற மனைவியின் மனசின் ஓரத்தில் கணவன் மீது கொஞ்சம் பாசம் இருந்தது என்று சொல்வது போல பா.ஜ.க. கூட்டணியை விட்டு அ.தி.மு.க. விலகினாலும் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் வஞ்சனை செய்யும் பா.ஜ.க. பாதுகாக்கும் எண்ணத்தை எடப்பாடி பழனிசாமி வெளிப்படுத்தியது அபத்தமான உள்ளது.

காவிரி வழக்கில் மாதந்தோறும் இந்த அளவில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதை கர்நாடக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் அவ்வாறு நடைமுறைப்படுத்துவதை கணகாணிப்பதற்காகத் தான் ஒன்றிய அரசின் கீழ் இயக்கும் காவிரி ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது.

கர்நாடகா தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்கள் காவிரி விவகாரத்தில் நேரடியாக மோதிக்கொள்ள கூடாது என்பதால் தான் அதை கண்காணித்து மத்தியஸ்தம் செய்ய ஒன்றிய அரசின் துறை கீழ் ஆணையமும் குழுவும் இயங்குகின்றன என்பதை எடப்பாடி பழனிசாமி உணரவில்லையா? அல்லது உணர்ந்தும் தீர்மானத்தில் ஒன்றிய பா.ஜ.க.வை மட்டும் குறிப்பிட்டுள்ளதை மனம் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கிறாரா? என்பது தான் நம் கேள்வி.

### பா.ஜ.க. விற்கு ஆதரவாக தீர்மானத்தில் திருத்தம் கேட்பதா?

கர்நாடகாவிடம் தமிழ்நாடு பலமுறை பேசி பிரச்சிளை முடிவுக்கு கொண்டுவர முடியாததால் தான் உச்சநீதிமன்றத்தை நாடினோம். தீர்ப்பை அமல்படுத்தவே ஒன்றிய அரசின் கீழ் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. காவிரி ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் ஆகிய இரண்டு அமைப்புகள் தான் பொறுப்பேற்க வேண்டும். இதை மறைத்துவிட்டு, பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு ஆதரவாக தீர்மானத்தில் திருத்தம் கேட்டது அபத்தமானது

காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்கவில்லை என்றும், திமுக அரசுக்கு துணிச்சல் இல்லை என்றும் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் கூறியிருக்கிறார்.

இதன் மூலம் தற்போது காவிரி விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்த்து கர்நாடக அரசை தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட வைக்க வேண்டிய முழு பொறுப்பும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குத்தான் உள்ளது என்கிற உண்மையை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

காவிரி விவகாரத்தில் தி.மு.க. அரசு துணிச்சலாக செயல்படவில்லை என்று கூறும் எடப்பாடி பழனிசாமி, முதலில் தம்முடைய துணிச்சலை சட்டப்பேரவையில் இன்று வெளிப்படுத்தியிருக்கலாம்.



ஒன்றிய பா.ஜ.க.வை கண்டிக்காத பழனிசாமி!

ஒன்றிய பாஜக அரசு, இரு மாநில மக்களிடையே இனமோதல்களை தூண்டி விடுகிறது. தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைக்கிறது. துணை ராணுவத்தை அனுப்பி கர்நாடகாவிலிருந்து தண்ணீர் பெற்றுத்தர வேண்டும் என்றெல்லாம் சட்டப்பேரவையில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் எதிரொலித்தன. ஆனால் எடப்பாடி பழனிசாமி பேசும்போது ஒன்றிய அரசைக் கண்டித்து ஒரு சிறிய வார்த்தைக்கூட கூறவில்லை.

காவிரி விவகாரத்தில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே சட்டப்பேரவையில் முதலமைச்சர் இன்று தனித் தீர்மானக் கொண்டுவந்தார். உச்சநீதிமன்ற உத்தரவுபடி காவிரி நீரை தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட ஒன்றிய அரசை வலியுறுத்தித்தான் இன்று தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. ஆனால் தீர்மானத்தில் என்ன கூறிருக்கிறது என்பதைகூட முழுமையாக படித்துப்பார்க்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முட்டுக் கொடுக்கும் வேகத்தில் உளறிக்கொட்டினார் எடப்பாடி பழனிசாமி.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி காவிரி நீரை திறக்க வலியுறுத்த வேண்டும் என்பதையும் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என ஏற்கனவே தீர்மானத்தில் உள்ளதையே மீண்டும் சேர்த்து தீர்மானத்தை திருத்த வலியுறுத்தியதன் மூலம், காவிரி விவகாரத்தில் பந்து ஒன்றிய பாஜக அரசு பக்கம் திரும்பி விடக்கூடாது, கர்நாடகம், தமிழ்நாடு. உச்சநீதிமன்றம் என்றே இந்த விவகாரம் சுழல வேண்டும் என்கிற பாஜகவினரின் சிந்தனையைத்தான் எடப்பாடி பழனிசாமியும் வெளிப்படுத்தினார்.

காவிரி விவகாரத்தில் ஒன்றிய பாஜக அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சட்டப்பேரவையில் இரண்டு கட்சிகளைத்தான் எரிச்சலைத் தந்தன. ஒன்று பாஜக மற்றொன்று அதிமுக.

கடந்த வாரம் கோவையில் அளித்த பேட்டியில் 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றியத்தில் யார் ஆட்சி அமைத்தாலும், தமிழ்நாட்டில் மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலிப்போம் எனக் கூறினார் எடப்பாடி பழனிசாமி. இதிலிருந்தே நாடாளுமன்ற தேர்தலுக்கு பின் பாஜகவுடன் கூட்டணி அமைக்க அதிமுக தயங்காது என்றும் தற்போது பாஜகவின் பி டீமாகத்தான் அதிமுக தனியாக செயல்படுகிறது என்றும் புரிந்தது.

இன்று காவிரி விவகாரத்திலும் சட்டப்பேரவையில் பாஜகவின் பி. டீமாக மோடி அரசை பாதுகாப்பதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் பேசினார் எடப்பாடி பழனிசாமி.

கடந்த ஜீலை மாதம் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் கூட்டத்தில் பங்கேற்க சென்றபோது கர்நாடக முதலமைச்சர் சித்தராமைய்யாவிடம் காவிரி விவகாரம் குறித்து ஏன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று கேட்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

அதுபோன்று பேச்சுவார்த்தை நடத்துவது காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை மறுப்பதற்கு கர்நாடகா விரித்த வலையில் நாம் விழுவதற்கு சமமானது.

ஏற்கனவே 100 ஆண்டுகளுக்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தி உரிய பலன் கிடைக்காததால்தான் கடந்த 2018ம் ஆண்டு உச்சநீதிமன்றம் மூலம் இந்த விவகாரத்திற்கு தீர்வு காணப்பட்டது. மீண்டும் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தொடங்கினால் அது பிரச்சனையை முதலில் இருந்து தொடங்குவதற்கு சமம். அது கர்நாடகாவிற்கு தான் சமம்.

அமைச்சர் துரைமுருகன் சட்டப்பேரவையில் இன்று சட்டப்பேரவையில் கூறியது போல, காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை கர்நாடகத்தில் அடகு வைக்கத்தான் எடப்பாடி பழனிசாமியின் யோசனை உதவும்.

காவிரி விவகாரத்தை 2018ம் ஆண்டு உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்புக்கு முன், இறுதி தீர்ப்புக்கு பின் என இரண்டு வகையாக பிரிக்கலாம். 2018ம் ஆண்டுக்கு பின்னர் இந்த விவகாரத்தில் காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் பெற்றுத்தர வேண்டிய முழு பொறுப்பு காவிரி மேலாண்மை ஆணையத்திற்குத்தான் உள்ளது. அந்த ஆணையத்தின் உத்தரவுகளை கர்நாடக அரசு செயல்படுத்த தவறினால் அது ஒன்றிய பாஜக அரசின் தோல்வியையும், கையாலாகதாதளத்தையும்தான் குறிக்கும்.

கர்நாடக காங்கிரஸ் அரசு தண்ணீரை திறந்துவிட்டால்தான் இந்தியா கூட்டணியில் சேர்வோம் என தி.மு.க. நிபந்தனை விதிக்காதது ஏன் என, கேள்வி எழுப்பியிருக்கிறார். எடப்பாடி பழனிசாமி.

பெங்களூருவில் ஜீலை 18 ஆம் தேதி இந்தியா கூட்டணியின் கூட்டம் நடைபெற்ற அதே நாளில்தான் போட்டா போட்டியாக தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தை டெல்லியில் கூட்டியது பா.ஜ.க. அந்த கூட்டத்திற்கு ஆள்கிடைக்காமல் தவித்தது பா.ஜ.க. அ.தி.மு.க.தான் பா.ஜ.க.விற்கு அடுத்தபடியாக பெரிய கட்சியாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடக அரசு திறந்துவிடச் செய்தால்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணிக கூட்டத்தில் பங்கேற்போம் என எடப்பாடி பழனிசாமி நிபந்தனை விதித்திருக்கலாமே இந்தியா கூட்டணி என்பது ஒரே கொள்கைக்காக, ஒரே நிலைப்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட கட்சியல்ல, ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கூட்டணி. அந்த நிலைப்பாடு ஒன்றியத்திலிருந்து பா.ஜ.க. அரசை அகற்றி நாட்டை காப்பாற்ற வேண்டும் என்பதுதான். இந்த கூட்டணியில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்த வேண்டும் என்றால் எதற்கு தனித்தனியாக முதலமைச்சர்கள், இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் ஒரே முதலமைச்சர் என அறிவித்துவிடலாமே.

கடந்த 2018ம் ஆண்டு காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க வலியுறுத்தி நாடாளுமன்றத்தை தொடர்ந்து 22 நாட்களாக அ.தி.மு.க. எம்.பிக்கள் முடக்கியதாகவும், அது போன்ற துணிச்சல் திமுகவிற்குஇல்லை என்றும் எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார்,

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகம் செய்தாலும் பரவாயில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக இருப்பதே எங்களின் இலக்கு என்று செயல்படும் துணிச்சல் அதிமுகவை போல தி.மு.க. விற்கு கிடையாது.

காவிரி உரிமையை பெறுவதற்காக அ.தி.மு.க. எம்.பி.க்கள் 22 நாட்கள் அவையை முடக்கினர்” என எதிர்க்கட்சித தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார். இது முற்றிலும் உண்மையற்ற தகவல்

2018ஆம் ஆண்டு எதிர்க்கட்சிகளின் அமளியால் 21 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கியது என்பது உண்மை. ஆனால் அ.தி.மு.க. எம்.பிக்களால் மட்டுமே அது நடந்தது. அதுவும் காவிரி நீருக்காகவே நடந்தது என்பது பொய்.

பா.ஜ.க. மோடி அரசு மீது ரபேல் ஊழல் புகார் கூறியும், சீக்கிய கலவர வழக்குகளின் தீர்ப்பைக் கண்டித்தும் காங்கிரஸ் அமளி செய்தது. தனி மாநில அந்தஸ்து வழங்க வலியுறுத்தி தெலுங்குதேசம் கட்சி எம்.பி.க்கள் அமளி செய்தனர் அப்போது அ.தி.மு.க. எம்.பிக்கள் அமளி செய்து காவிரி நீர் குறித்த கோரிக்கைப் பதாகைகளைக் காண்பித்தனர்.

அ.தி.மு.க. எம்.பி.க்களின் அமளி என்பது மோடி அரசுக்கு ஒத்திசைவாக மற்ற கட்சிகளின் அமளியை மலினப்படுத்த செய்யப்பட்ட நாடகம் என தெலுங்கு தேசம் கட்சி எம்.பிக்கள் கண்டித்தனர்.

தனி மாநில அந்தஸ்து விவகாரத்தில் ஆந்திராவை சேர்ந்த தெலுங்கு தேசம் கட்சியும், ஒய்.எஸ்.ஆர் காங்கிரசும் மோடியின் பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. அப்போது அதை செய்யவிடாமல் மோடிக்கு ஆதரவாக அ.தி.மு.க. எம்.பிக்கள் அமளி செய்து நாடகம் நடத்துகிறார்கள் என எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தது வரலாறு. அதை எடப்பாடி பழனிசாமி மறைக்க முடியாது.

இவ்வாறு - அண்ணா அறிவாலயத்தில் பேட்டியின்போது சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை எடுத்து சாதனை படைத்தார் நமது முதலமைச்சர்!

# தஞ்சையில் அரிய பிரகடனங்களை அறிவித்தார் - மகிழ்கிறோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, அக்.11-*

*அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை என்ற தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை எடுக்க முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டார் கலைஞர்; இன்று அந்த முள்ளை எடுத்து சாதனை படைத்தார் நமது முதலமைச்சர். அரிய பிரகடனங்களை அறிவித்தார் மகிழ்கிறோம், மகிழ்கிறோம் பூரிப்புக்குப் பஞ்சமில்லை என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*56 ஆண்டுகளுக்குமுன் ஆட்சியை அமைக்க மக்கள் இட்ட ஆணையை ஏற்று அழைக்கப்பட்ட தந்தை பெரியாரின் தலைமகன் அறிஞர் அண்ணா திருச்சிக்குச் சென்று, தாய்க்கழகத் தலைவரான தந்தை பெரியாரைச் சந்தித்து ஆட்சி வெற்றிக்கனியை அவர்தம் காலடியில் வைத்து, ‘எங்களை வழிநடத்துங்கள் அய்யா’ என்று கேட்டு, தந்தை தாய்க்கழகம் வாழ்த்திட, மகிழ்ச்சியில் திளைத்தார் அண்ணா.*

*18 ஆண்டுகால நீண்ட இடைவெளி, 18 நிமிடங்களிலேயே காணாமற்போயிற்று; தந்தையின் வாழ்த்தும், தாய்க்கழகத்தின் பூரிப்பும் நிரந்தரமாகி, நிலைத்த வரலாற்றைத் தந்தது! தருகிறது!! தொடர்கிறது!!!*

### தந்தை பெரியார் ஆணையிட்டார்

*முதலமைச்சர் அண்ணா மறைவு என்ற கொடுந்துயரத்திற்குப் பின், கலைஞர்தான் அப்பொறுப்பிற்குப் பொருத்தமானவர் என்பதை தனது அனுபவ ஞானத்தால் அளந்தறிந்த தந்தை, ஆணையிட்டார் அவருக்கு! கலைஞர் பொறுப்பேற்று அண்ணாவின் முப்பெரும் சாதனைகளின் அடிக்கட்டுமானத்தை மேலும் பல மடங்கு விரிவான ஆட்சிச் சாதனைகளாக்கி, சமூகப் புரட்சி, ஜாதி, தீண்டாமை, பெண்ணடிமை ஒழிக்கும் சட்டத் திட்டங்கள்மூலம், தனிச் சரித்திரம் படைத்துத் தரணி புகழ் பெருமை பெற்று வாழுகிறார்! வாழ்த்தப்படுகிறார்!!*

*“மானமிகு சுயமரியாதைக்காரர்”தம் மகுடத்தின் மதிப்பே இதில்தான் அடங்கியுள்ளது என்றாக்கி, தனது ‘ஞானத்தந்தை’ நெஞ்சில் தைத்த முள்ளையெடுத்தார் சட்டப் போராட்டத்தின் மூலம்!*

### “தமிழ்நாடு வெற்றிடம் அல்ல கற்றிடம்!”

*கலைஞர் மறைவிற்குப் பின், “தமிழ்நாடு வெற்றிடம் அல்ல; கற்றிடம்” என்று பார் புகழ் கட்சி, ஆட்சி இரண்டு பொறுப்புகளையும் அடக்கத்தோடும், ஆழ்ந்த அனுபவ அறிஞர்கள் துணையோடும் வரலாற்றின் வைர வரிகளை நாளும் எழுதிக் கொண்டுள்ளார் நமது சமூகநீதிக்கான சரித்திர நாயகர்!*

*திராவிடர் ஆட்சியாம் நீதிக்கட்சியை நீட்சியாக்கிய அண்ணாவை, திருச்சிக்குத் தாய்க்கழகம் அழைத்தது 17, செப்டம்பர் 1967 இல்!*

*தந்தையும், தனயனும் உவகைப் பெருக்கோடு ஊர்வலத்திலும் பவனி வந்து, தாய்க்கழகத்தின் பாசத்தைப் பெருமதிப்புடன் ஏற்றார்.*

*தி.க. தி.மு.க. இரட்டைக் குழல் துப்பாக்கி இன எதிரிகளைக் கலக்கியது; அரசியலைக் குலுக்கியது! ஆரியம் ஏமாந்தது!!*

### அன்று கலைஞரை தஞ்சைக்கு அழைத்தோம்!

*அண்ணாவிற்குப் பிறகு அவரது அரசியல் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்த*



*நம் கலைஞரை, அவர்தம் செயற்கரிய சட்டச் சாதனையை ஆதிதிராவிடர் உள்பட அனைத்து ஜாதியினரும் நுழைய முடியாத நீண்ட ஸநாதனத்தினைப் புரட்டிப் போட்ட ஒரு சட்டப் போராட்டம், வெற்றி கண்டதைப் பாராட்டி, அய்யா, அன்னை ஆகியோரின் மறைவிற்குப் பிறகு, எளியவர்களாக எங்களைப் போன்றோரைக் கொண்ட தாய்க்கழகத்தின் அழைப்பையும் தட்டாமல் ஏற்று, தாய்வீட்டின் பாச மழையில் நனைந்து, உள்ளத்தின் உவகைதனை கவிதையாக்கி மலை உச்சியிலிருந்து பாடுகிறேன் என்று பாடி மகிழ்ந்தார்!*

*பெரியார் ஆட்சி, அண்ணா கலைஞர்மூலம் மட்டுமல்ல, தன்மூலமும் தொடருகிறது என்று காட்டிய நம் தளபதியின் தன்னிகரற்ற ஆட்சியின் சாதனையைப் பாராட்டி, உச்சிமோந்து உயர்தனிப் பாசத்துடன் அழைத்தோம், அதே தஞ்சைக்கு!*

*இன்று கலைஞரின் வழி வந்த முதலமைச்சரும் எங்கள் அழைப்பை ஏற்று தஞ்சை வந்தார்!*

*2023 அக்டோபர் 6 இல் அழைப்பை ஏற்று, தாய்வீட்டுக்குத் தரணி புகழ் பரணியோடு,*

*எம்மவர்*
*வந்தார்*
*கண்டார்,*
*மகிழ்ந்தார் மகிழ வைத்தார்!*

*தந்தார் வரலாற்றுப் பிரகடனங்களை!*

*எத்தனை எத்தனை இன்பம்*

*அத்தனையும் எழுதிட எப்படித்தான் முடியும்?*

*உயிரும், உடலும் ஒன்றுக்கு ஒன்று*

*உறவாடத்தான் முடியுமே தவிர,*

*கட்டிப் பிடித்து பாசம் காட்ட முடியுமா?*

*காரணம் என்றும்*

*ஒட்டியிருப்பதே அவ்விரண்டும்!*

*ஒன்றில்லை என்றால் மற்றதில்லை*

*உற்றாரும், உலகாரும் அறியவேண்டிய உண்மை இது*

*என்று பிரகடனப்படுத்தியது தஞ்சை விழா!*

*எங்கள் எல்லையற்ற பாசமிகு முதலமைச்சருக்குத் தாய்(க்கழகம்) எப்படி நன்றி கூற முடியும்?*

*மகிழ்ச்சிக் கண்ணீர் ஊற்றெடுத்த நிலையில்*

*துடைத்து நினைவலைகளில்*

*நீந்திக் களிப்பதைவிட?*

*பூரிப்புக்குப் பஞ்சமில்லை*

*திராவிடத்தின் தனிச் சிறப்பு இப்படிப்பட்ட எங்கும் எவரும் பார்க்க முடியாத உறவாலும், தகர்க்க முடியாத உணர்வாலும், அது தனது எதிர்நீச்சல் பயணத்தை தடைக்கற்களைத் தாண்டி, தனது தொடர் பயணத்தைத் தொடர்ந்து வெற்றி வாகை சூடிடவும் வரலாற்று வரிகளை நாளும் எழுதிடும் எழுச்சி ஏற்படுத்தும்!*

*தாய்வீட்டில் கலைஞர் அன்று*

*தாய் வீட்டில் வினைஞர் (நாளும்) இன்று!*

*பிறகென்ன பூரிப்புக்குப் பஞ்சம்?*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை!

*நாமக்கல் அக். 11 -*

*நாமக்கல் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது.*

*கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி. எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த குமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ.என்.ரகு நா. இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நேர்காணல் நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான .ஆர்.என். இராஜேஸ் குமார் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.*

*நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் உள்ளிட்ட 3 தொகுதிகள் அடங்கிய 11 பேரூராட்சிகளுக்கு நபர்களும் , 10 ஒன்றியங்களுக்கு, 4 நகரங்களுக்கு 24 நபர்களும் இந்த நேர்காணலானது நடைபெறுகிறது.*

*நகராட்சிக்கு 1 அமைப்பாளர் மற்றும் 5 துணை அமைப்பாளர்கள் என 24 நபர்களும், ஒன்றியத்திற்கு 1 அமைப்பாளர் 5 துணை அமைப்பாளர்கள் என 61 நபர்களும், பேரூராட்சிக்கு 1 அமைப்பாளர் 4 துணை அமைப்பாளர்கள் என 44 நபர்கள் என 129 பேர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.*

*இந்த நேர்காணலில் மொத்தம் 454 பேர் பங்கு பெற்றுள்ளனர். கலந்து கொண்ட இளைஞர்களிடம் கழக மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 3 குழுக்களாக பிரிந்து 3 தொகுதிகளுக்கு இந்த நேர்காணலை நடத்தினர்.*

*முன்னதாக நாமக்கல் என்.கொசவம்பட்டியில் இல்லந்தோறும் புதிய இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான .ஆர்.என். இராஜேஸ்குமார், கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா, நாமக்கல் நகர கழக செயலாளர்கள் எஸ். பூபதி (கிழக்கு, ராணா ஆனந்த் (தெற்கு), நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரார் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், ம.ரமேஷ்குமார், ரா. கலைவாணன், இரா.பிரபாகரன், கிழக்கு நகர இளைஞர் அணி அமைப்பாளர் சிலம்பரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

*இந்த நேர்காணல் நிகழ்ச்சிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரார் வ.இளம்பரிதி, எம். கார்த்திக், ம.ரமேஷ்குமார், ரா.கலைவாணன், இரா.பிரபாகரன் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.*





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரின் 'நான் முதல்வன்' - 'புதுமைப்பெண்' திட்டங்களால்

# பொறியியல் கல்லூரிகளில் மாணவ-மாணவியர் சேர்க்கை அதிகரிப்பு!

## பேரவையில் அமைச்சர் க.பொன்முடி விளக்கம்!

சென்னை, அக்.11-

முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த 'நான் முதல்வன்' 'புதுமைப்பெண்' திட்டங்கள் காரணமாக பொறியியல் கல்லூரிகளின் மாணவ, மாணவியரின் சேர்க்கை அதிகரித்து வருவதாக பேரவையின் கேள்வி நேரத்தின்போது உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி விளக்கமளித்தார்.



அது வருமாறு :

**டி.எம்.தமிழ்செல்வம்:** ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதுவும் இல்லை. மாத்தூரிலிருந்து, கிருஷ்ணகிரியில் உள்ள ஆண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 35 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பெண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 40 கி.மீ. தூரம் உள்ளது. பர்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 32 கி.மீ. தூரத்தில் என் தொகுதி ஊத்தங்கரை ஏழ்மையான தொகுதி என்பதால், எங்களுக்கு ஒரு கலைக் கல்லூரி அல்லது நர்சிங் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் க.பொன்முடி:** தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை குறிப்பாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், அரசு பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்று சொன்னதன் மூலமாக எல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள். அதைவிட புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக, கிராமப்புறத்தில் இருக்கிற மாணவ, மாணவிகளுக்கு, அதுவும் குறிப்பாக, பெண்களுக்கு மாதம் ரூ.1,000/. மாணவிகளுக்கு, அதுதனியார் கல்லூரியாக இருந்தாலும், அதே மாதிரி அரசு கலைக் கல்லூரியாக இருந்தாலும் எங்கே மாணவிகள் சேர்ந்தாலும், அவர்களுக்கு மாதம் ரூ.1,000/ என்று வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். இது, புதுமைப் பெண் திட்டம். அதனால், இப்போது பெண்களின் படிப்பும் அதிகரித்திருக்கிறது. இதன் மூலமாக அரசு கலைக் கல்லூரிகளில் முன்பு இருந்ததைவிட இப்போது எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய மாவட்டத்திலேயே இந்த பெண்கள், அரசு கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மிகக் குறைவு. மொத்தம் 3,602 பேர். சேர்ந்திருக்கிற மாணவர்கள் 3,105. காலி 497தான். ஒன்லி 15%. ஆனால், தனியார் கல்லூரிகளில் பார்த்தீர்களென்றால், அங்கே மொத்த மாணவர்கள் 3,069. சேர்ந்திருக்கிற மாணவர்கள் 1,787தான். 40% காலியாக இருக்கிறது. ஆக, இதற்கெல்லாம் காரணம், அரசு கலைக் கல்லூரிகளிலும், அரசு கல்லூரிகளிலும் மற்றும் எல்லா பொறியியல் கல்லூரிகளிலும் இன்று மாணவர் சேர்க்கை அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'நான் முதல்வன் திட்ட'மும், 'புதுமைப் பெண் திட்ட'மும்தான் முக்கிய காரணம்.

ஆகவே, உங்களுடைய தேவை அதையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரே ஆண்டில் 31 கல்லூரிகளைத் துவக்க வேண்டுமென்று ஆணையிட்ட ஒரே முதலமைச்சரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உயர்கல்வித் துறையின் மூலமாக 20, அறநிலையத் துறையின் மூலமாக 10, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒன்று, மொத்தம 31 கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஆகவேகல்லூரிகள் இல்லாத தொகுதிகளில் துவக்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலைமைக்கு ஏற்ப அதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.பொன்னுசாமி:** நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்டகொல்லி மலை ஒன்றியத்தில் சுமார் 60,000 பேர் மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் கல்லூரிக்கு செல்ல வேண்டுமென்றால், 150 கி.மீ. செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்நிலையைப் போக்க கொல்லிமலையின் மேலே அரசு கலைக் கல்லூரி அமைக்க அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் க.பொன்முடி:** இந்த மலைவாழ் பகுதிகளில் கல்லூரிகளை அமைக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கும் ஒரு முக்கிய எண்ணம் இருக்கிறது.

நம்முடைய அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் கூட நான் சென்ற மாதம் கொடைக்கானல் சென்றிருந்தபோது, அங்கே ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் கூட ஊட்டி மலையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதி, அங்கே ஒரு கல்லூரி வேண்டும் எனக் கேட்டார். ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்தப் பகுதிகளில் எல்லாம் நிதிநிலைக்கேற்ப கல்லூரிகளை அமைப்பதற்கு விரைவில் அதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ளும்.

சு.ரவி: எங்கள் தொகுதியில் உள்ள அரக்கோணம் அரசு கலைக் கல்லூரியிலே சுமார் 1,500 ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அந்தக் கல்லூரியிலே அனுமதிக்கப்பட்ட 83 பேராசிரியர் பணியிடங்களில் 32 பேராசிரியர்கள்தான் இருக்கிறார்கள். இரண்டு வருடங்களாக 51 பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கிறது. இதனால், மாணவர்கள் கல்லூரிக்கு வருகிறார்கள், போகிறார்கள் என்றாலும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு கல்வி என்பது மிகவும் கேள்விக் குறியாக இருக்கிறது. அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கல்லூரியிலே காலியாகவுள்ள 51 பேராசிரியர் பணியிடங்களுக்கு, புதிய பேராசிரியர்கள் நியமிக்கும் வரை, உடனடியாக கௌரவப் பேராசிரியர்களையாவது நியமனம் செய்து, அங்குள்ள மாணவர்களுடைய எதிர்காலத்தை பாதுகாக்குமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

முனைவர் க.பொன்முடி: இந்த ஆண்டு இதுபோன்ற கௌரவப் பேராசிரியர்கள் முழுவதுமாக நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அங்கு காலியிடம் இருக்குமானால் குறிப்பாக முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்றபோதே 4 ஆயிரம் பேராசிரியர்களை TRB மூலமாக நியமிக்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள். அதற்கான பணிகளும் வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றன. அது சம்பந்தமாக சிலர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். அதனால், சற்று தடை இருக்கிறது. அங்கு காலியிடம் இருக்குமானால், நீங்கள் எழுதிக் கொடுங்கள், அங்கு கௌரவப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு நிச்சயமாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவ – மாணவிகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரைப்பட வசனங்கள், கவிதைகள் ஒப்பிக்கும் போட்டி மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி போட்டியினை துவக்கி வைத்தார். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செல்லப்பொன்னி, மாவட்டக் கழகப் பொருளாளர் ப.க.பழனிசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இளையகோபால் உள்ளிட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிற்கே வழிகாட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

சென்னை, அக். 11-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதலளிக்கையில், இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் என்று பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது: -

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக அவர் விளங்குகிறார் என்பதற்கு ஓர் அடையாளமாக ஒரு செய்தியைச் சொல்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னர் தெலுங்கானா மாநிலத்திலே காலை சிற்றுண்டி என்கின்ற ஒரு திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்கே வழிகாட்டியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான் காலைச் சிற்றுண்டித் திட்டத்தைத் தொடங்கி வைத்து இருக்கிறார்கள்.

எனவே அந்தத் திட்டத்திற்குத் தாயாக விளங்குகிற முதலமைச்சர் அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 11–

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2023) கீழ்க்கண்ட குறளையும் அதற்கான கலைஞர் உரையையும் படித்தார்.

குறள் : **"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வருஞ் சேர்வது நாடு"**

**கலைஞர் உரை** : செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீயவழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.




2023-24 ஆம் ஆண்டிற்கான

# ரூ.2,893.15 கோடி மதிப்பில் முதல் துணை மதிப்பீடுகள்!

## சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல்!

சென்னை, அக். 11 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நடப்பு நிதி ஆண்டிற்கான ரூ.2893.15 கோடி முதல் துணை மதிப்பீடுகளை தாக்கல் செய்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது :-

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த மாமன்றத்தில் வைப்பதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை முதற்கண் உரித்தாக்கிக்கொள்ள விரும்புகிறேன். வங்கக் கடலோரம் துயிலும் எங்கள் தங்கத் தலைவர் 'தலைவர் கலைஞர்' அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தை தெரிவித்து, இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த அவை முன் வைக்கிறேன்.

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான ஒரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 2,893.15 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

மாநிலப் பேரிடர் தணிப்பு நிதியின்கீழ், சென்னைப் பெருநகர மாநகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகள் மற்றும் கடலூர் மாநகராட்சி ஆகியவற்றிற்கு மழைநீர் வடிகால் அமைக்க 304 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகைதுணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மற்றும் திருச்சி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு பங்கு மூலதன உதவியாக 175.33 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.8 - பால் வளம் (கால் நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை)" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக் கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 25 வட்டாரங்களில் பாதிக்கப்பட்ட 1,87,275 விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய நிவாரண உதவி வழங்குவதற்காக அரசு 181.40 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு (STUs) வழிவகை முன்பணமாக 171.05 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.48 - போக்குவரத்துத் துறை" என்பதன் கீழ் ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூ.1,000/ சேர்க்கப் பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தித்தின் மூலம் செலவிடப்படும்.



அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான இயக்கத்தின்கீழ் (AMRUT), திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மாநில மற்றும் ஒன்றிய அரசின் பங்காக 893.23 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் 150 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண்.34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

2013 ஆம் ஆண்டின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், மாநிலத்திற்குள் உணவு தானியங்களைக் கையாளுதல் மற்றும் விநியோகித்தல், நியாய விலைக் கடைகள் மற்றும் முகவர்களுக்கான இலாபம் ஆகியவற்றிற்கான ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்காக 511.84 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது.

இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தொழில் 4.0 தரநிலையை எய்தும் நோக்கில் 45 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை சீர்மிகு மையங்களாகத் தரம் உயர்த்துவதற்கு 277.64 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.150 கோடி "மானியக் கோரிக்கை எண் 20 உயர் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

அடையாறு நதி மறுசீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த 139.14 கோடி ரூபாய்க்கு அரசு கூடுதல் அனுமதி அளித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.1,000 "மானியக் கோரிக்கை எண் 34நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

# திராவிடப் போராளிகள்

**38** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## திராவிட இயக்கப் பெண் சிங்கம்!

அன்னை சத்யவாணிமுத்து அம்மையாரின் வாழ்க்கை, போராட்டங்களும் சாதனைகளும் நிறைந்தது. சத்தியவாணி-முத்து தம்பதிக்கு அறச்செல்வன், சித்திரைமுகி, மரகதமணி, செழியன் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் பங்கேற்று சத்தியவாணிமுத்து அவர்கள் சிறை சென்றார். அப்போதும் அவர் நிறைமாத கர்ப்பிணி. சிறையிலேயே அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற நெடுஞ்செழியன் என்ற தி.மு.க. தொண்டர் சிறையிலேயே இறந்துவிட்டார். எனவே, அவரது நினைவாக சிறையில் பிறந்த தன் மகனுக்கு செழியன் என்று பெயர் சூட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அவரது அமைச்சரவையில் செய்தித்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலன் (அப்போது அரிசன நலன் என்று பெயர்) அமைச்சராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார். ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டினார். ஆதிதிராவிடர் சமூகத்தில் பிறந்தவரைக் கலப்பு மணம் செய்துகொண்டால், தங்கப்பதக்கம் வழங்கும் திட்டத்தை முதல்வர் அண்ணாவின் ஒப்புதலுடன் உருவாக்கினார்.

### தமிழ் சினிமாக்களுக்கு விருது!

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் சிறந்த திரைப்படங்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக பரிசுகள் வழங்கும் திட்டத்தை அவர்தான் நடைமுறைப்படுத்தினார். ஆதி திராவிடர் சமூகத்தினர் தொழில் தொடங்க கடன் உதவி வழங்கவும், கூட்டுறவுத் துறை மூலம் விவசாயிகள் பயன்பெறவும் சிறந்த திட்டங்களை அறிமுகப்படுத்தினார். தமிழ்ப் பண்பாட்டுத்துறையின் தூதராக மொரீஷியஸுக்குச் சென்று பல நிகழ்வுகளில் உரையாற்றினார்.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து பல புதிய திட்டங்களை இங்கு அறிமுகப் படுத்தினார். குறிப்பாக, பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் திறக்கப்படவும், ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளுக்கான இல்லங்களை நடத்தவும் முன்னோடித் திட்டங்களை வகுத்தார். அவரது சமூகப் பணிகளுக்காக அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

### பெண்ணால் பெண்களுக்கான ஏடு

‘கல்வியே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கருவி’ என்ற அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையை உணர்ந்திருந்த அம்மையார், சென்னை மாவட்டத்தின் ஆதிதிராவிடச் சமுதாய மக்கள் நிறைந்திருந்த வியாசர்பாடி பகுதியில் அண்ணல் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை நிறுவ,



ஓவியம் : ரவி பேலட்

பெருமுயற்சி எடுத்து, முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன் அதனை நிறைவேற்றினார். இந்தக் கல்லூரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பெறுவதற்கு உதவியது. இன்றும் உதவி வருகிறது.

அரசியலைப் போலவே இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த சத்தியவாணிமுத்து, பெண்களிடம் திராவிட இயக்கக் கருத்துரை பரவுவதற்கு ஏற்ற வகையில் **‘அன்னை’** என்ற மாத இதழை 1958-ஆம் ஆண்டு தொடங்கினார். **‘அன்னை’** இதழ் அறிமுக விழாவில் சி.பி.சிற்றரசு அவர்கள் தலைமையேற்க, பேரறிஞர் அண்ணா, இனமானப் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறந்த கவிதைகள், அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், மருத்துவக் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அந்த இதழ் சிறப்பாக வெளிவந்தது. திராவிட இயக்கத்தில் பெண்களுக்காக ஒரு பெண்ணே நடத்திய முதல் ஏடு என்ற பெருமையை ‘அன்னை’ பெற்றது. அதன் அடையாளமாக ‘அன்னை’ சத்தியவாணிமுத்து என்றே அம்மையார் அழைக்கப் பெற்றார்.

**தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் ‘ஆகாஷவாணி’ என்று அறிவிப்பதை மாற்றி, ‘அகில இந்திய வானொலி நிலையம்’ என்று ஒலிக்கச் செய்தார்.**

### தி.மு.க.விலிருந்து விலகல்

அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது சத்தியவாணிமுத்து அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறையின் அமைச்சராகப் பணியாற்றினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராகவும் செயல்பட்டார்.

இவ்வாறு செயலாற்றி வந்த அம்மையார் 1974-ஆம் ஆண்டு சில கருத்து முரண்பாடுகள் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி ‘தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்’ என்ற ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இயக்கத்தை எம்.ஜி.ஆர் தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்துவிட்டு, தானும் அந்தக் கட்சியில் இணைந்துவிட்டார். 1978-ஆம் ஆண்டு அ.தி.மு.க சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினரானார்.

### மீண்டும் தி.மு.க.வில்...

1979-ஆம் ஆண்டு ஜனதா கட்சியின் ஆட்சியில் பிரதமர் சரண் சிங்கின் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகப் பணியாற்றினார். அப்போது தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் ‘ஆகாஷவாணி’ என்று அறிவிப்பதை மாற்றி, ‘அகில இந்திய வானொலி நிலையம்’ என்று ஒலிக்கச் செய்தார். 1984-ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க சார்பாக, மாநிலங்களவை உறுப்பினராகச் செயலாற்றினார்.

விமர்சனங்களுக்குரிய அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்ட காலத்தில், தி.மு.க தலைவர் கலைஞர் அவர்கள் மீது கடுமையான கருத்துக்களைத் தெரிவித்த சத்தியவாணிமுத்து அம்மையார், 1989-ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் அவர்கள் தலைமையை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். இடையில் ஏற்பட்ட பல்வேறு கசப்பான நினைவுகளைப் புறந்தள்ளி திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் தொடக்கக் கால தலைவர்களில் ஒருவரான சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களை மீண்டும் மகிழ்வுடன் வரவேற்றது.

அதுமட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு மிக்க விழாவாகச் செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படும் முப்பெரும் விழாவில் வழங்கப்படும் பெருமைக்குரிய விருதான ‘பெரியார் விருதினை’ 1991- ஆம் ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாருக்குக் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

### நூற்றாண்டு காணும் தலைவர்

அதன்பின் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே தொடர்ந்து செயல்பட்ட சத்தியவாணிமுத்து அம்மையார் 1999-ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று மறைந்தார். அம்மையாரின் மூத்த மகள் சித்ரமுகி இன்றும் திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் ஆலோசனைக் குழு உறுப்பினராகச் செயல்பட்டுவருகிறார்.

சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பறைசாற்றும் வண்ணம் கலைஞர் அவர்களால் சென்னையின் மையப் பகுதியான சேப்பாக்கத்திலும் மந்தைவெளியிலும் எண்ணூரிலும் ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளுக்கு ‘அன்னை சத்யவாணிமுத்து நகர்’ என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாரின் நூற்றாண்டாகும். ‘அவரது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து மாறுபாடு இருந்தாலும் சுயமரியாதைக் கொள்கையில் இறுதிவரை அவர் காட்டிய உறுதி மறக்க முடியாதது’ என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

### தி.மு.க.வின் பெண் சிங்கம்

அம்மையாரின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பான ஒரு விழாவாகக் கொண்டாடிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், பெண்களுக்குத் தையல் இயந்திரத்துடன் சுயதொழில் தொடங்கும் திட்டத்தை அம்மையாரின் பெயரால் தொடங்கி வைத்தார்.

மேலும் முதல்வரின் உரையில்,

**“பெண்களையெல்லாம் பேதையர் என்று**
**மண்ணினும் கீழாய் மதித்த நாளில்**
**புடவைச் சிறுத்தையாய் புறப்பட்டு வந்த**
**சத்தியவாணித் தாய் நீ;**
**சிற்றூர் பேரூர் நகரம் அனைத்தும்**
**சுற்றிய புரட்சிச் சூறாவளி நீ என்பதால்**
**ஆயிரம் சரித்திரம் அடங்கிய திராவிட இயக்கத்திலே**
**உனக்கு ஒரு சரித்திரமுண்டு;**
**அரைநூற்றாண்டு**
**பொதுத் தொண்டு செய்த பெரியாரின் மகளே,**
**நீ ஒரு நூற்றாண்டு வாழ்க”**

என்ற புலவர் புலமைப்பித்தன் அவர்களின் கவிதையை நினைவுப்படுத்தி, ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் சிங்கமாக வாழ்ந்து காட்டியவர் சத்யவாணிமுத்து அம்மையார்’ என்று அவரது பெருமையைப் பதிவு செய்தார்.

இந்த வரலாற்றுப் பதிவுகள் திராவிடப் போராளியாக வாழ்ந்து சாதனைகள் புரிந்த ‘அன்னை’ சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பேசிக்கொண்டே இருக்கும்.

(வருவார்கள்...)

## இந்தியைக் காப்பாற்றிய தமிழ்!

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஹரியானாவின் இரண்டாம் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்தது. இதைப் பலரும் தற்போது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். ஆனால், அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்தியைக் காப்பாற்றவே ஹரியானாவில் தமிழ் கொண்டுவரப்பட்டது.

1969-ஆம் ஆண்டு, பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஹரியானா உருவானது. அப்போது பஞ்சாபின் ஆட்சி மொழியான பஞ்சாபியே ஹரியானாவிலும் தொடர்ந்தது. ஆனால், ஹரியானா மக்கள் இந்தி பேசுபவர்கள் என்பதால், இந்தி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது மொழியாக பஞ்சாபியை அறிவித்தால், இந்திக்குப் பாதிப்பு ஆகும் என அப்போதைய முதலமைச்சர் பன்சி லால் தமிழை இரண்டாம் ஆட்சி மொழியாக அறிவித்தார். 2010-ஆம் ஆண்டில் தான் தமிழை நீக்கிவிட்டு, பஞ்சாபியை இரண்டாம் ஆட்சி மொழியாக்கினர்.

தமிழை வடமாநிலங்களில் கற்றுக் கொடுப்போம் என கிளம்பும் சிலருக்கு இந்த வரலாற்றினை உணர்த்த வேண்டும். இந்தி மொழி மாநிலங்கள் எந்த நிலையிலும் இரண்டாவது மொழியை உயர்த்திப் பிடிப்பதில்லை என்பதற்கு ஹரியானா உதாரணம். ஆனால், அங்கும் இந்தியைக் காப்பாற்றியது தமிழ் என்பதுதான் வரலாறு.

## :ப்ளாஷ்பேக்



### ‘அயோத்தியா’வில் கலைஞர்!



ஜெயக்குமார்

1980-களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர், சேலம் வரும்போதெல்லாம் அவரைப் பார்க்க, எங்கள் ஊர் இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு சைக்கிளில் போஸ் மைதானம் வரை செல்வோம். அப்போதிருந்தே அவரை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உருவானது. 1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சேலம் அயோத்தியாபட்டினம் ராமர் கோயில் அருகில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது ஒன்றியப் பிரதிநிதியாக இருந்த எனக்கு, அவரை நேரில் சந்தித்து சால்வை அணிவிக்கும் வாய்ப்பு அமைந்தது. சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் அவர்களும் மேடையில் இடம்பெற்றிருந்தார். என் வாழ்நாளில் மறக்கமுடியாத புகைப்படம் இது.

**-கே.ஜெயக்குமார், ஒன்றிய தி.மு.க முன்னாள் பிரதிநிதி, அயோத்தியாபட்டினம், சேலம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சில லட்சங்கள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திப்பதற்குத் தீவிரமாகத் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. தேர்தல் நிதியை எப்படித் திரட்ட வேண்டும், பிரச்சாரம் எத்தகையதாக இருக்க வேண்டும், கழகத்தின் சின்னம் எப்படி அமைய வேண்டும் என யோசிக்கத் தொடங்கினார். அதன் வெளிப்பாடாக 1956-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற மாணவர் நிதி அளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர், ‘‘தேர்தலுக்காக நாம் சேகரிக்க நினைப்பதெல்லாம் சில லட்சம் ரூபாய்கள்தான்’’ எனத் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 266




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.